# இயேசுவின் வருகை

## எங்கே? எப்போது? எப்படி?



திருமறை அறிஞர் Dr. A. கிறிஸ்டோபர்

# இயேசுவின் வருகை

## எங்கே? எப்போது? எப்படி?

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. Dr. **அ.கிறிஸ்டோபர்**, M.A., D.D.,

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேரு வீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9. தென்இந்தியா.

RE - EDITION - AUGUST 2012
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 10

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 94434 - 99486**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**
**Bank A/C : ALEX DHINAKARAN**
**Bank of India (Erode Branch)**
**A/C No. 820210100005638**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. **யோபு ஞானப்பிரகாசம்**
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் – 12.

ஆவிக்குரிய புத்தகங்களினால் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதியதொரு அசைவை உண்டாக்கிய பாஸ்டர்.அ.கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பல தரப் பட்ட ஆவிக்குரிய தேவை உள்ள மக்களின் உள வேட்கையைத் தணிக்கும் இவரது எழுத்துக்கள் இனிய தமிழில் எளிய நடையில் கொள்கைப் பிடிப்பில் உறுதியோடு அமைந்திருத்தல் பாராட்டுக்குரியது.

இவர் எங்கள் இ.பெ.அ. ஸ்தாபனத்தின் ஈரோடு மாவட்ட மத்தியப் போதகராகவும், ஈரோடு திருச்சபையின் ஸ்தலப் போதகராகவும் இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார். எங்கள் ஸ்தாபனத்தின் பத்திரிக்கையான 'இந்தியா பெந்தெகொஸ்தே நற்செய்தி' யில் தொடர்ந்து குடும்பங்களுக்கான செய்திகளை எழுதி வருகிறார்.

இவரது முந்தின வெளியீடுகளாகிய, வளமான பிரசங்கி, ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது, என் தாசனாகிய யோபு போன்ற புத்தகங்கள் மிகப்பெரும் ஆசீர்வாதத்தை வாசகர்களுக்கு கொண்டு வந்தது போல் இவரின் புதிய படைப்புகள் பெரும் ஆசீர்வாதங்களை தேவ ஜனத்திற்குக் கொண்டுவரக் கர்த்தர் கிருபை செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன். ஜெபிக்கிறேன்.

– ஆமென்.



## என்னுரை

என் இனிய வாசகர்களே!

இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இயேசுவின் வருகையைக் குறித்த இந்த இனிய நூலை மறுபதிப்புச் செய்து தங்களுக்கு வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் திரும்ப இந்த உலகத்திற்கு வரப்போகிறார், அந்த வருகையை குறித்த தெளிவான சத்தியங்களை இந்த நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன்.

ஆரம்ப நாட்களில் இந்த சத்தியங்களை கன்வென்ஷன் கூட்டங்களில் தவறாமல் பேசி வந்தேன், இப்பொழுதோ எங்கும் உள்ள தெய்வ பிள்ளைகள் கையேடாக பயன்படுத்தும் விதத்தில் அடக்கமான அளவு அச்சிட் டுள்ளேன். வாசித்து வருகைக்காக ஆயத்தப்படுங்கள்.

கடிதங்கள் மூலமாக, காணிக்கைகள் மூலமாகவும், கனிவான ஜெபத்தின் மூலமாகவும், என்னைத் தாங்கி வருகின்ற அனைவருக்கும் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் இலக்கியப் பணியில்,
**அ.கிறிஸ்டோபர்.**

## படைக்கிறேன்

அந்தகார இருளினின்று
ஆச்சரிய ஒளிக்கு அழைத்து
இன்ப ஆவி தந்த
ஈசனே கோடி ஸ்தோத்திரம்

உளை சேற்றினின் றெடுத்து
ஊற்றுண்ட தைலத்தை பொழிந்து
எழுத்து ஊழியத்தில் நிலைக்க
ஏற்றம் தந்தாய் ஸ்தோத்திரம்

ஐங்காயங்களால் அணைத்து
ஒப்பில்லா கிருபைகள் அளித்த
ஓமெகாவே கோடி ஸ்தோத்திரம்
ஔஷதமாய் ஆக்கிடவே – நின்பாதம்
இஃதினைப் படைக்கிறேன் – ஏற்றிடுவீர்

இவண்

**அ.கிறிஸ்டோபர்.**



**பொருளடக்கம்**

**அதிகாரம்**


**1. இயேசுவின் வருகை – ஓர் அறிமுகம்**

**2. இயேசுவின் வருகையின் அடையாளங்கள்**

**3. இயேசுவின் வருகை எப்படி இருக்கும்?**

**4. இயேசுவின் பகிரங்க வருகை**

**5. இயேசுவின் வருகைக்கு ஆயத்தந்தானா?**

# 1

# இயேசுவின் வருகை – ஓர் அறிமுகம்

இயேசுவின் வருகை என்ற வார்த்தையை உச்சரிக்கும்போதே இருதயத்தில் இன்பப் பெருக்கெடுத்து ஓடுகிறது, உள்ளம் உவகை கொள்கிறது. சர்வ சிருஷ்டியும் இதற்காகத்தானே! காத்துத் தவிக்கிறது, இன்ப நேசரின் வருகையைக் குறித்த இனிய பலகருத்துக்களை இந்தப் புத்தகத்தில் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைக்கு வலுவான இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று, இயேசுவின் முதலாம் வருகை, மற்றொன்று அவரின் இரண்டாம் வருகை இல்லாவிட்டால் அவரின் முதலாம் வருகை அவசியமற்றதாகி விடும். இயேசுவின் முதலாம் வருகை இல்லாமல் போயிருந்தால் அவரின் இரண்டாம் வருகை அநியாயமான ஒன்றாகியிருக்கும்.

சத்தியமும், கிருபையும் நிறைந்த ஆண்டவர் தமது காருண்யத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தும்படி, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பூவுலகத்திற்கு மனுவாக வந்தார். இந்த முதலாம் வருகை தற்செயலாகவோ ஏனோ தானோவென்றோ இல்லாமல் ஏறக்குறைய இரு ஈராயிரம் ஆண்டுகளாக அவரின் முதலாம் வருகை எங்கு? எப்படி? எப்பொழுது? என்று முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின்படியே அமைந்திருந்தது.

ஆம்! யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறப்பார் என்று



மீகா தீர்க்கதரிசியினால் (மீகா 5:2) சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படியேயும், ஸ்திரீயின் வித்தாக அவர் பிறப்பார் என்று (ஆதி 3:15) பிதாவினாலும், கன்னிகையினிடத்தில் பிறப்பார் என்று ஏசாயாவினாலும், (ஏசாயா 7:14) யாக்கோபில் ஓர் நட்சத்திரம் உதிக்கும் என்று பிலேயாமினாலும் (எண் 24:17), யூதா கோத்திரத்தில் பிறப்பார் என்று யாக்கோபினாலும் (ஆதி 49:10) சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின்படியே இயேசுகிறிஸ்து கன்னிகையாகிய மரியாளிடத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் யூதா கோத்திரத்தில் எழுத்து மாறாமல் பிறந்தார்.

அவரின் பிறப்புக்கு மாத்திரமல்ல அவரின் 33 1/2 ஆண்டு கால பூலோக ஊழியத்தைக் குறித்தும் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் இருந்தது. அவர் நாசரேத்தில் வளருவார் என்றும், எகிப்துக்கு சென்று திரும்பி வருவார் என்றும் (ஓசியா 11:1) அவர் மேல் ஆவியானவர் இருப்பார் என்றும், அவருடைய ஊழியத்தால் அநேக தரித்திரர் ஆசீர்வதிக்கப்படுவர் என்றும் (ஏசாயா 11 : 2), அவருடைய ஊழியத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கப் பட்டிருந்தது.

அவரோடே பழகினவனே அவரைக் காட்டிக் கொடுப்பான் என்றும் (சங்கீதம் 41 :9), அவர் வஸ்திரத்திற்கு சீட்டு போடப்படும் என்றும் (சங்கீதம் 22 : 18) அவருக்குக் குடிக்கக் காடியைக் கொடுப்பார்கள் என்றும் (சங்கீதம் 69 : 21), அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார் என்றும் (ஏசாயா 53:12), அவருடைய எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படுவதில்லை என்றும் (சங்கீதம் 34 : 20) அவரின் மரணத்தைக் குறித்த தீர்க்க தரிசனங்கள் முன்னுரைக்கப் பட்டிருந்தது.

ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம்

பண்ணப்படுவார் என்று ஏசாயா 53 :9 இல் அவருடைய அடக்கத்தைக் குறித்தும் அவருடைய பரிசுத்தரின் அழிவைக் காணவொட்டார் என்று சங்கீதம் 16:10 இல் கிறிஸ்துவின் சாவாமையைக் குறித்தும் தேவரீர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களை சிறையாக்கிக் கொண்டு போனீர் என்று சங்கீதம் 68 :18 இல் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் முன்னுரைக்கப்பட்டிருந்தது.

மேலே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் யாவும் அவருடைய 33 1/2 ஆண்டு கால உலக ஜீவியத்தில் அட்சரம் பிறழாமல் அரங்கேறியது. அதிலும் கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த சிலமணி நேரங்களில் பல தீர்க்கதரிசனங்கள் படபடவென்று நிறைவேறியது.

நான் இங்கு இவற்றையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த விண்ணிலும் மண்ணிலும் கர்த்தரின் கணக்கின்படியே காலச்சக்கரம் சுழல்கிறது. காரியங்கள் நடந்தேறுகிறது.

இவ்வுலகத்தின் முதல் மனிதனுக்கே கூட இயேசுவின் முதலாம் வருகையைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டது. அநேக தீர்க்கதரிசனங்கள் மூலமாய் அவைகள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆகிலும் முன்னுரைக்கப் பட்ட தீர்க்கதரிசனங்களின்படியே குறித்த காலத்தில் இயேசுகிறிஸ்து மனுவாகப் பிறந்தபோது அநேகர் அஃதிணை அறியவில்லை, அநேகர் ஏற்றுக் கொள்ளவுமில்லை.

யூதருக்கு இராஜாவாய்ப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று கீழ்த்திசை ஞானிகள் விசாரித்தபோது விழி பிதுங்கி நின்றனர் ஏரோது மாளிகையினர். முன் நடப்பாரும் பின் நடப்பாரும் ஓசன்னா என்று பாடி வர, இவர் யார்? என்று விவரம் தெரியாமல் வியப்போடு கேட்டனர் எருசலேம் நகரத்தார். (மத்தேயு 21 : 10)



ஆக, முதலாம் வருகையைக் குறித்து நூற்றுக் கணக்கான தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கப் பட்டிருந்தாலும் ஆயக்காரர் முதல் ஆசாரியர் வரை அஃதிணை அந்நிய காரியமாகவே எண்ணி அலட்சியமாக இருந்ததினால் மேசியாவைத் தள்ளி மோசமான சாபங்களை வருவித்துக் கொண்டார்கள். முதலாம் வருகையைக் குறித்துத் திட்டமான தீர்க்கதரிசனங்கள் இருந்தது போலவே அவரின் இரண்டாம் வருகையைக் குறித்து இரு மடங்கு இறுக்கமான தீர்க்கதரிசனங்கள் நமக்கு உண்டு.

முதலாம் வருகையைக் குறித்த பல தீர்க்கதரிசனங்கள் இருந்தும் மக்கள் அதை சரியாய் ஆராய்ந்து ஆசீர்வாதத்தை அனுபவிக்கத் தவறி விட்டார்கள். அவருடைய முதலாம் வருகையைக் குறித்த அத்தனை தீர்க்கதரிசனங்களும் எப்படி வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியதோ அப்படியே அவரின் இரண்டாம் வருகையைக் குறித்த அத்தனை தீர்க்க தரிசனங்களும் துல்லியமாய் நிறைவேறும். தாம் சொன்னதை இரண்டாம் விசை தேவன் திருத்துகிறவரல்ல என்ற வார்த்தையின்படி எந்த மாற்றமுமில்லாமல் அவரின் இரண்டாம் வருகை நிகழ்ந்தேறும்.

வருகையைக் குறித்த சாட்சிகள்

முதலாம் வருகையை முன்னறிவித்த பல தீர்க்கர்கள் இரண்டாம் வருகையையும் சேர்த்து முன்னறிவித்திருக் கிறார்கள். ஆயிரமாயிரம் பரிசுத்தவான்களோடு கர்த்தர் வருகிறார் என்று ஆதாமுக்கு ஏழாந் தலைமுறையான ஏனோக்கும், (யூதா1:14,15) அவருடைய பாதங்கள் ஒலிவமலையின் மேல் நிற்கும் என்று சகரியா தீர்க்கதரிசியும் (சகாரியா 14 : 4,5) அவர் வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைசத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் என்று

சங்கீதக்காரனும் சங்கீதம் 96:13 தீர்க்கதரிசனம் உரைத்துள்ளனர்.

இதோ! ஒரு இராஜா நீதியாக அரசாளுவார். பிரபுக்களும் நியாயமாக துரைத்தனம் பண்ணுவார்கள் என்று ஏசாயாவும் ஏசாயா 32 : 1 பாகையைக் கழற்று கீரிடத்தை எடுத்துப் போடு...... உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும் என்றும் அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என எசேக்கியேல் தீர்க்கதரிசியும் (எசேக் 21 : 26, 27) இராத் தரிசனங்களை நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார் என்று தானியேலும் (தானி7 :13) பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளனர்.

இவைகளைப் பார்க்கிலும் இயேசுகிறிஸ்து தாமே தமது வருகையைக் குறித்து சொன்ன வார்த்தைகள் நமக்கு போதுமான அத்தாட்சியாயிருக்கிறது. நான் போகிறேன் உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்திற்கு சேர்த்துக் கொள்வேன் என்றும் யோவான் 14 : 1,2,3 இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்றும் வெளி 22 : 12 கூறியிருக்கிறார்.

இயேசு முன்மொழிந்தது மாத்திரமல்ல பரலோகமும் அவரது வருகையினை வழிமொழிந்திருக்கிறது. இயேசுவின் பிறப்பு தூதனால் மரியாளுக்கு அறிவிக்கப்பட்டது போலவும், மேய்ப்பர்களுக்கு தூதனால் அறிவிக்கப்பட்டது போலவும், இயேசுவின் உயிர்த்தெழுதல் மாதர்களுக்குத் தூதரால் அறிவிக்கப்பட்டது போலவும், அவரின் வருகையைக் குறித்தும் தூதர்களே மனிதர்களிடத்தில் சாட்சி சொல்லியுள்ளார்கள்.



இயேசு கிறிஸ்து பரத்திற்கு ஏறிச் சென்ற பொழுது அவரின் பரமேறுதலைப் பரவசப்பட்டு பார்த்துக் கொண்டிருந்த சீஷர்களுக்கு தேவதூதன் தரிசனமாகி, கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள். உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்று அறிவித்தார்கள் அப் 1 : 11

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள், பரிசுத்தராகிய இயேசு, பரிசுத்த தூதர்கள் ஆகியோர் மாத்திரமல்ல. அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் அவருடைய வருகையைக் குறித்து முன்னறிவித்திருக்கிறார்கள். விசுவாச அறிக்கையிட்டிருக்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல்! I தெசலோ. 4 : 16, 17ல் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கிற நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவரோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்போதும் கர்த்தருடனேகூட இருப்போம் என்று கூறியுள்ளார்.

இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் மேகங்களுடனே வருகிறார் என்று வெளி 1 : 7 முன்னுரைத்துள்ளார். அப்போஸ்தல ஊழியத்தில் முதன்மையாக விளங்கிய பேதுரு கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருகிற விதமாய் வரும் என்று (IIபேதுரு 3: 10) முன்னறிவித்துள்ளார். தங்கள் காலத்திலேயே கர்த்தருடைய

வருகை இருக்குமென்றெண்ணி ஆதித் திருச்சபையினர் விசுவாசத்தோடு எதிர்பார்த்திருந்தனர். உள்ளதை விற்று பொதுவாய் அனுபவித்தார்கள். மேன்மையான உயிர்தெழுதலைப் பெறும்படி இரத்த சாட்சிகளாய் மரிக்கத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன் என்று இயேசு யோவா. 6: 54 –இல் கூறியுள்ளார். ஆதியிலிருந்து அப்பம் பிட்குதலை அவருடைய வருகையோடு இணைத்தே திருச்சபை அனுஷ்டித்து வருகிறது.

1 கொரிந்தியர் 11–ஆம் அதிகாரம் 26 ஆம் வசனத்தில் .... இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக் கிறீர்கள் என்று எழுதியிருக்கிறதினால் கர்த்தருடைய வருகைக்கு சிறந்ததொரு அறிவிப்பு மணி கர்த்தருடைய பந்தி என்று விளங்குகிறதல்லவா?

இத்தனை சிறந்த தீர்க்கதரிசனங்கள் அறிக்கைகள், அத்தாட்சிகள் வருகையைக் குறித்து இருந்த பின்பும் கவலையற்றவர்களாயிருக்கலாமா? கரிசனையற்றுக் கிடக்கலாமா? இரண்டாம் வருகை கட்டுக்கதையல்ல. கற்பனை உபதேசமல்ல. மார்க்கப்பிதாக்களின் பயமுறுத்தும் பாடத்திட்டமும் அல்ல.

ஆதியிலே மனிதன் தேவனோடு உலாவினான். அவனுடைய மீறுதலினிமித்தம் பாதியிலேயே மகிமையிழந்து ஏதேன் தோட்டத்தை விட்டு வீதியிலே வந்து நின்றான். அவர்கள் இழந்த மகிமையை தமது வருகையில், ஜோதியாய் அருள்வதற்கு அன்பின் தேவன் நீதியாய் வைத்திருக்கும் அருட்சித்தமே அவரின் இரண்டாம் வருகை.



முன்னுரைக்கப்பட்ட முதலாம் வருகையை அநேகர் அல்லத்தட்டினாலும் அவர் வந்தார் – வாழ்ந்தார் – வானத்திற்கு சென்றார். அப்படியே நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நீங்கள் ஆயத்தமாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார். தாமதம் பண்ணார்.

வருகையைக் குறித்த சந்தேகம்

எனதருமை வாசகரே! எக்காளசத்தம் தொனிக்கும் கடைசிக் காலத்தில் நீங்களும் நானும் இருக்கிறோம். நீங்கள் அவரை சந்திக்க ஆயத்தம் தானா? இந்தக் கடைசிக் காலத்தில் உங்களை திசை திருப்பும்படி பல நூதன உபதேசங்களும் சில ஒத்துப் போகும் உபதேசங்களும் உலா வந்து கொண்டிருக்கின்றன.

தீவட்டியை எடுத்துக் கொண்டு எண்ணெயில்லாமல் புறப்பட்ட மதிகெட்ட கன்னிகைகளைப்போல் அல்ல. தங்கள் தீவட்டிகளோடு எண்ணையையும் கொண்டுசென்ற விவேகமுள்ள ஸ்திரிகளைப் போல் விவரங்களை அறிந்து விசுவாச ஜீவியத்தில் வீர நடைபோட்டு எந்நிலையிலும் அவருக்குக் காத்திருந்து அவரை சந்திக்க தீரமுள்ள மக்களாய் வாழ, சில வருகையின் சத்தியங்களை தொடர்ந்து வரும் பக்கங்களில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

திறந்த மனதோடும், தீராத தாகத்தோடும் சிறு பிள்ளைகளின் உள்ளத்தோடும் சிறந்த ஜெபத்தோடும் வாசியுங்கள். வேதத்தோடு ஒப்பிட்டு சீர் பொருந்துங்கள். வசனத்தோடு ஐக்கியப்பட்டு வளர்ந்தோங்குங்கள்.

கடைசிக் காலத்தில் விசுவாசத்தை மறுதலிக்கிறவர்கள்

எழும்புவார்கள் என்ற தீர்க்க தரிசனத்தின்படியே பலர் எழும்பி கிறிஸ்துவின் வருகையைக் குறித்து தவறான உபதேங்களை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் வருமளவும் இவனிருக்கச் சித்தமானால் உனக்கு என்ன? என்று யோவானைக் குறித்து பேதுருவிடம் இயேசு சொன்ன வார்த்தைகளை கோடிட்டுக் காட்டி பத்மு தீவில் யோவானுக்கு ஆண்டவர் தரிசனமான போதே இரண்டாம் வருகை நிகழ்ந்தாயிற்று என்று சிலர் கூறுகின்றனர்.

வேறு சிலர் உபத்திரவகாலம் வருவதற்கு முன்பே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்ற வார்த்தையைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு விசுவாசிகளின் மரணத்தின் போதும் இயேசுவின் இரண்டாம் வருகை நிகழ்கிறது என்கின்றனர்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் கள்ளத் தீர்க்கதரிசிகளில் ஒருவரான தமிழ்நாட்டைச் சார்ந்த பாலாசிர்லாறிபோன்றோர், மனிதன் சந்திரனில் கால் வைத்த போதே தேவன் பூமிக்கு இறங்கி விட்டார் என்று கூறு கின்றனர்.

இவ்வகைக் கூற்றுகள் எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகள். அவர்கள் சொல்லுகிறபடி இயேசு கிறிஸ்துவின் வருகை நடந்தேறியிருக்குமானால் வேதத்தில் சொல்லியுள்ளபடி அந்திக் கிறிஸ்து ஆட்சி நடந்திருக்க வேண்டுமே? மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருக்க வேண்டுமே? பரிசுத்தாவி ஊற்றப்படுவது நின்றிருக்க வேண்டுமே? இப்படிப்பட்டவைகள் நடவாததினால் கர்த்தரின் வருகை நிச்சயம் நடைபெறவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

வேறு சிலர், உயிரோடிருக்கிற நாமும்



மறுரூபமாகப்படுவோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்ன வார்த்தையை மேற்கோள் காட்டி முதல் நூற்றாண்டில் நடைபெற வேண்டிய வருகை இந்த இருபதாம் நூற்றாண்டு வரை நடைபெறாததினால் இனியும் வருகை இருக்காது என்று போதிக்கின்றனர் – சாதிக்கின்றனர்.

வேதம் சொல்வதைக் கவனியுங்கள். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி.... (IIபேதுரு 3 : 9) தமது வருகையைத் தள்ளிப் போட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல அவர் வருகைக்கு முன் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய கட்டாயமிருக்கிறது. அந்த ஆக்கப் பூர்வமான பணி அதிவேகமாக நடந்தாலும் இன்னும் முற்றுப் பெறவில்லை. சுவிசேஷப் பிரசங்கம் முழு உலகத்தைசந்தித்தவுடன் வாக்கு மாறாதவர் அப்படியே வருவார்.

அவருடைய வருகை தாமதிக்க இன்னும் ஒரு காரணம் உண்டு. மணவாட்டியாகிய நமக்காக மாபெரும் மகிமை பொருந்திய வாசஸ்தலத்தை தேவன் கட்டிக்கொண்டு வருகிறார். அந்த மகிமையின் மாளிகை முற்றுப் பெற்றவுடன் யோவான் 14:3 இயேசுகிறிஸ்து தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சரீர மீட்பாகிய இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் எபிரேயர் 9:28 ஆகவே அவர் வரும்போது நாம் நிர்வாணிகளாயிராதபடி சகல ஆயத்தத்தோடும் அவருக்காய் காத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

வருகையின் இரண்டு நிலைகள்

கிறிஸ்தேசுவின் வருகையைக் குறித்து சொல்லப்

பட்ட வேத வசனங்களை தெளிவாக ஆராய்ந்து பார்த்தால் ஒரு மாபெரும் இரகசியத்தைக் கண்டு கொள்ள முடியும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை இரண்டு படிகளாக நிறைவேறும். முதலாவது இயேசு இரகசியமாய் வருதல். மற்றொன்று வெளியரங்கமாய் வருதல். இந்த அடிப்படை சத்தியத்தை அறியத் தவறுவதினால் அநேகர் குழம்பிக் கொள்கிறார்கள். அநேகரை குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்தவானவர் பரலோகத்தை விட்டு இறங்கி வருவார். அப்பொழுது, பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் பூமியை விட்டு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இப்படி இறங்கி வருகிற இயேசுவும் எடுத்துக் கொள்ளப்படுகிற சபையும் நடுவானில் சந்தித்துக் கொள்வார்கள். இது இரகசிய வருகை எனப்படும். இந்த வருகையை அவிசுவாசிகள் அறிய மாட்டார்கள். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் 1 தெசலோனிக்கேயர் 4–ஆம் அதிகாரம் 16, 17 வசனங்களில் எழுதியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவும் அவரோடு கூட, எடுத்துக் கொள்ளப்பட்ட சபையும் இந்த பூலோகத்திற்கு இறங்கி வருவார்கள். இறங்கி வருவது மாத்திரமல்ல இந்தப் பூலோகத்தை இயேசு நீதியோடு அரசாளுவார். இது பகிரங்க வருகை எனப்படும். இதைத்தான் அப்போஸ்தலானாகிய பவுல் 11 தெசலோனிக்கேயர் 1 : 8 இல் தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வருவார் என்று தெரிவிக்கிறார்.

இப்படியிருக்க இந்த வருகையின் இரண்டு நிலைகளும் எங்கு? எப்படி? எப்பொழுது? நிறைவேறும் என்பதை நீங்கள் தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாம் வருகையில் இரகசிய வருகை இருக்காது. பகிரங்க வருகையே இருக்கும் என்று சிலர் நம்புகிறார்கள். இரகசிய வருகையைக் குறிக்கும் ஆங்கிலப் பதமான Rapture என்ற வார்த்தை வேதாகமத்தில் எங்கு எழுதப்பட்டிருக்கிறது? என்று அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்.



என்னைப் பொறுத்தவரை வசனங்களிலிருந்து விடை கொடுப்பதைப் பார்க்கிலும் விசுவாசத்தின் அடிப்படையில், முதற்கண் விடை கொடுக்க விரும்புகிறேன்.

இது இரகசிய வருகை. எனவே வெளியரங்கமான வியாக்கியானம் தேவையில்லை. கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. ஆகவே கர்த்தருக்கு பயந்து பரிசுத்தாவியில் நிறைந்து பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் மிகத் தெளிவாய் இந்த சத்தியத்தை விளக்கித் தருகிறார்.

எனினும் என் இனிய வாசகர்கள் ஏமாற்றமடைய லாகாது என்றெண்ணி இரகசிய வருகையைக் குறித்தும் பகிரங்க வருகையைக் குறித்தும் திருமறை கூறுகிற தெளிவான வசனப் பகுதிகளை ஜோடிப்படுத்திக் காட்ட விரும்புகிறேன்.

**இரு வருகைகளின் வித்தியாசங்கள் :**

1. இரகசிய வருகையில் I தெலோனிக்கேயர் 4 : 16, 17–ன்படி பரத்தை விட்டிறங்கி நடுவானிற்கு இயேசு வருவார். பகிரங்க வருகையில் சகரியா 14 : 4–ன்படி எருசலேமின் எதிரே இருக்கிற ஒலிவமலைக்கு வருவார்.
2. இரகசிய வருகையில் I தெசலோனிக்கேயர் 4: 16–ன்படி ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் இறங்கி வருவார். பகிரங்க வருகையில் II தெசலோனிக்கேயர் 1 : 8–ன்படி வல்லமையின் தூதரோடும் அக்கினியோடும் இறங்கி வருவார்.
3. இரகசிய வருகையில் II பேதுரு 3:10–ன்படி திருடனைப் போல் இரகசியமாய் இயேசு வருவார். பகிரங்க வருகையில் சகரியா 12:10–ன்படி குத்தினவர்கள் யாவரும் அவரைக் காணும்படி பிரத்தியட்சமாய் வருவார்.

4. இரகசிய வருகையில் I தெசலோனிக்கேயர் 4:17–ன் படி இயேசுவோடு சபை சேர்த்துக் கொள்ளப்படும். பகிரங்க வருகையில் சகாரியா 14 : 5–ன்படியும் யூதா 1:15–ன் படியும் இயேசு சபையாகிய தமது பரிசுத்தவான்களோடு இறங்கி வருவார்.
5. இரகசிய வருகையில், வெளிப்படுத்தின விசேஷம் 19 : 7–ன்படி கிறிஸ்து மணவாளனாக இறங்கி வருவார். பகிரங்க வருகையில் வெளிப்படுத்தின விசேஷம் 19 : 11–ன்படி இயேசு இராஜாதி இராஜாவாய் இறங்கி வருவார்.

**இரகசிய வருகைக்குப்பின் நிலைமைகள் :**

மேலே நாம் கண்டபடி இயேசு கிறிஸ்து சீக்கிரத்தில் தம்முடைய பரிசுத்தவான்களை சேர்த்துக் கொள்ளும்படி மணவாளனாய் மத்திய ஆகாயத்தில் வெளிப்படப் போகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பூமிக்கு ஒளி என்றும், சாரமுள்ள உப்பு என்றும் ஆடுகள் என்றும் உதாரணப்படுத்தி சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட பரிசுத்தவான்களை அவர் எடுத்துக்கொண்டவுடன் இந்த பூமி ஒளி இழந்த வீடாய், மலரில்லா முட்செடியாய், ஓநாய்களின் மந்தையாய், உப்பில்லா உணவாய் நொந்து வெந்து கெட்டு குழம்பியிருக்கும்.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் இந்த முழு உலகத்தை சாந்திப்படுத்தும் வேடம் தரித்துக் கொண்டு சமாதானப் புறாவாய் நடித்துக் கொண்டு இந்த உலகத்தைத் தன் வயப்படுத்தி ஆளுகை செய்யக்கூடிய வஞ்சகன் ஒருவன் எழும்புவான். அவன் அரசியல் அறிவியல், ஆன்மீகம் ஆகியவற்றில் தேறினவனாயிருந்து அகில உலகத்திற்கும் தன்னை ஆண்டவனாகக் காண்பிப்பான். அவனே வேதம் சொல்லுகிற அந்திக் கிறிஸ்து.

இந்த அந்திக் கிறிஸ்துவின் அலங்கோலமான அபாயகரமான – அருவருப்பான ஆட்சி இந்த அவனியில்



நடைபெறும்போது எடுத்துக் கொள்ளப்பட்டசபை மத்தியவானில் மணவாளன் இயேசுவோடு மகிழ் கொண்டாடிக் கொண்டிருக்கும். அந்திக் கிறிஸ்துவின் ஏழு ஆண்டு கால ஆட்சிக்குப் பிறகு கிறிஸ்து இயேசு தம்முடைய சபையோடு இந்தப் பூலோகத்திற்கு இறங்கி வருவார்.

அவரது பகிரங்க வருகையின் போது அந்திக் கிறிஸ்துவைப் பிடித்து அக்கினிக் கடலில் தள்ளி சாத்தானைக் கட்டி பாதாளத்தில் அடைத்து வெளி 19:20, 20:1 அன்போடும் அருளோடும் ஆசீரோடும் ஆயிரம் ஆண்டுகள் இந்த அவனியை ஆட்சி செய்வார். அவரோடு கூட எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களும் ஆயிரம் ஆண்டுகள் இராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருந்து ஆளுவார்கள்–ஆனந்திப்பார்கள், ஆர்ப்பரிப்பார்கள்.

**மனுஷ ஞானத்திற்கு மேலான வருகை :**

வருகையைக் குறித்த சத்தியங்கள் வசீகரமான வர்ணனை போல் தோன்றினாலும் அவைகள் வரப்போகும் உண்மைச் சம்பவங்கள். மனுஷ புத்திக்கு எட்டாத புதுமையான காரியங்களாய்த் தோன்றினாலும் இவைகள் வாக்குமாறா வல்ல தேவனே சொல்லியுள்ள ஜீவ வசனங்கள்.

இந்த மீட்புக்குரிய சத்தியம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாகவும், மீட்கப்படுகிறவர்களுக்கு தேவபெலனாகவும் இருக்கிறது. ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களினாலும் திருச்சபைக்கு வெளிப்படுத்தப்பட்ட இந்தக் காரியங்கள் நம்முடைய காலத்தில் நிறைவேறப் போகிறது. சுருங்கச் சொன்னால் அவைகள் நிறைவேறும் கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சீரேசு இராஜன் சீக்கிரம் வரப்போகிறார். சிந்தியுங்கள். சீர் பொருந்துங்கள்.

# 2

# இயேசுவின் வருகையின் அடையாளங்கள்

இயேசு கிறிஸ்து இந்தப் பூலோகத்தில் ஊழியம் செய்த நாட்களில் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள். ஆகவே சீஷர்கள் கேட்ட இரண்டு கேள்விகளுக்கு மத்தேயு 24–ஆம் அதிகாரத்தில் நேரடியாக சில காரியங்களையும் 25–ஆம் அதிகாரத்தில் உவமையாக சில காரியங்களையும் சொன்னார்.

இயேசுவின் வருகை வேறு. இந்த உலகத்தின் மூலபாஷையின்படி இந்த யுகத்தின் முடிவு வேறு. அந்திக் கிறிஸ்துவைக் குறித்தும் யுகங்களைக் குறித்தும் தெளிவாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். "இயேசு கிறிஸ்துவும் அந்திக் கிறிஸ்துவும் "காலங்களும் யுகங்களும்" என்ற என்னுடைய இரு புத்தகங்களை வாங்கி வாசியுங்கள்.

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னால் நிறைவேறும்படி கிறிஸ்தேசுவும் பரிசுத்த வேதாகமமும் சொன்ன தீர்க்கதரிசனங்கள் கொஞ்சங்குறைய எல்லாம் நிறைவேறலாயிற்று. எனவே கிறிஸ்துவின் வருகை அதிக நிச்சயம். நிறைவேறின சில அடையாளத் தீர்க்கதரிசனங் களைக் கோடிட்டுக்காட்ட விரும்பிகிறேன்.



**1. கிறிஸ்தவ உலகில் நிறைவேறும் அடையாளங்கள்** :

ஆவிக்குரிய உலகத்துள் நிறைவேறின அடையாளங் களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். யோவேல் 2 : 28–இல் கூறப்பட்டுள்ள, கடைசி நாளில் மாம்சமானயாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற தீர்க்கதரிசனத் தின்படி சபைப் பாகுபாடு – உபதேசபேதம் இவைகளெல்லா வற்றையும் தாண்டி பரிசுத்த ஆவியானவர் யாவர் மேலும் எல்லா இடங்களிலும் ஊற்றப்படுவது கடைசிக் காலத்தைக் குறித்த அடையாளமாயிருக்கிறது.

II தெசலோனிக்கேயர் 2 :3–ல் விசுவாச துரோகம் முந்தி நேரிடும் என்று சொல்லப்பட்ட வார்த்தையின்படி விசுவாசத்தை மறுதலிக்கும் உபதேசங்கள் இன்றைய கிறிஸ்தவ சபைகளில் உச்ச நிலையை அடைந்திருக்கின்றன.

புற மதத்தினரை விட கிறிஸ்தவ உலகத்திலுள்ள போதகர்களும், வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்களும் திருமறையை பொய்யாக்கும் காரியங்களில் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றனர். இதனைக் குறித்த சில உதாரணங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அரசரடி நூல் வரிசையாக "திருமறைக்குத் திரும்பு வோம்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இதழ்களில் கனம் சாமுவேல் அமிர்தம் அவர்கள் இறுதியியல் என்ற தலைப்பில் எழுதியுள்ள கருத்துக்கள் மிகவும் வியப்புக்குரியது. அதில் நரகம் நித்தியமானது அல்லவென்றும், நரகத்தைப் பற்றி சொல்லப்பட்டவைகளை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும் எழுதியிருக்கிறார்.

மேலும் மோட்சம் நரகம் என்பவைகள் ஒரு நிலையே தவிர நிலையான இடம் அல்ல என்று கூறுகிறார். நரகத்தில் இருள் இருக்கும் என்றும் 'அங்கே அக்கினி அவியாது

என்றும்' அங்கே அவர்கள் புழுசாகாதிருக்கும் என்றும் நரகத்தைக் குறித்துக் கூறப்பட்டுள்ள வார்த்தைகளை மேற்கோள்காட்டி, அக்கினி இருக்குமிடத்தில் இருள் எப்படியிருக்க முடியும்? அக்கினியில் புழு எப்படி சாகாமல் இருக்கும்? என்று மூளை சம்மந்தமான கேள்வி கேட்டு நரகம் என்ற ஒன்று இல்லையென்று அவர் அப்புத்தகத்தில் தெரிவிக்கிறார்.

இதைப் போன்ற ஏராளமான குறிப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். சில இறையியல் கல்லூரிகளில் ஆதியாகமத்தின் முதல் எட்டு அதிகாரங்கள் சிருஷ்டிப்பின் வரலாறு அல்ல. சிருஷ்டிப்பின் துவக்கத்தைக் காண்பிக்கும்படி பல மார்க்கங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட புனைவுக் கதைகள் என்று போதிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவ மக்கள் மத்தியில் சர்வதேச அளவில் ஒரு கருத்தாய்வு எடுக்கப் பட்டது. பெரும்பாலான சபைப் பிரிவினர் இயேசு கிறிஸ்து பரிசுத்தாவியினால் பிறக்கவில்லையென்று தாங்கள் நம்புவதாக அக்கருத்தாய்வில் வாக்களித்தார்கள். எப்பிஸ் கோப்பிலியன்கள் பிரிவில் 44 சகவிகிதத்தினரும் பாப்டிஸ்ட் களில் 44 சதவிகிதத்தினரும் பிரிஸ்பிட்டேரியன் சபைப் பிரிவில் 49 சதவிகிதத்தினரும் இயேசுவின் கன்னிப் பிறப்புக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

இந்தக் கருத்தாய்வின்போது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், வேதாகமம் பரிசுத்தாவியால் எழுதப்பட்டது என்ற இரு மெய்சத்தியங்களின் மேல் நம்பிக்கை உண்டா என்று கேட்கப்பட்ட கேள்வியில் மேற்கூறிய சபைப் பிரிவினரில் பெரும்பகுதியினர் எதிராகவே வாக்களித்தனர்.

நமது இந்தியாவிலும் கூட்டு வழிபாடு என்ற பெயரில்



மற்ற சமய வழிபாடுகளைத் தத்தெடுத்துக் கொள்ளும் பெரும் வியாதி திருச்சபைகளில் பரவி வருகிறது. இஸ்லாமியரின் புனித சின்னமாகிய பிறை வடிவத்தையும், இந்துக்களின் புனித சின்னமாகிய சூலத்தையும், கிறிஸ்தவர்களின் புனித சின்னமாகிய சிலுவையையும் இணைத்து ஒரு புது வழிபாட்டுச் சின்னத்தை அமைக்க சில கிறிஸ்தவப் பெரியோர்களே முனைப்பாக இருப்பது விசுவாச துரோகம் துவங்கிவிட்டது என்பதை நினைவுபடுத்துகிறதல்லவா?

பல ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை சினி ஆர்ட்ஸ் என்ற தமிழகத் திரைப்படக் கம்பெனி ஒன்று தங்கள் நிர்வாகத்தின் ஆங்கிலப் பெயரின் முதல் மூன்று எழுத்துக்களை (Thanjai Cini Arts) மூன்று மதங்களின் புனித சின்னங்களை கூட்டாக வைத்து வடிவம் அமைத் திருந்தது.

'Ψ' யை சிலுவை வடிவத்திலும், 'C' யை பிறைச் சந்திரன் வடிவத்திலும் 'A' யை கோபுர வடிவத்திலும் அமைத்து அவர்கள் வெளியிட்ட விளம்பரத்தைக் கண்ட போது அதிர்ச்சியுற்றேன். இதன் தாக்குதல் கிறிஸ்தவத்தைப் பாதிக்கும் என்று அப்பொழுதே எண்ணினேன். அன்று திரையுலகம் ஆரம்பித்து வைத்ததை இன்று திருச்சபை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. சிக்கிக் கொள்ளா திருங்கள். சிந்தித்து செயல்படுங்கள்.

தென் கேரள C.S.I. பேராயத்தின் பிஷப் கனம் சாமுவேல் அமிர்தம் அவர்கள், இயேசுவில் மட்டும் தான் இரட்சிப்பு என்று கூறுவது தவறு. மற்ற சமயங்களிலும் இரட்சிப்பு உண்டு என்றும் எல்லா மதமும் ஒன்று என்றும் விஷ வித்தினை தனது பேராயத்தில் வித்திட்டிருப்பதைக் குறித்து பிரபல ஆவிக்குரிய தமிழ் மலையாளப் பத்திரிகை

ஒன்று வெளியரங்கமாகவே கண்டித்து எழுதியிருக்கிறது.

அதே பத்திரிக்கை தனது அடுத்த இதழில் வெளியிட்டுள்ள ஒரு குறிப்பை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஜனவரி 92–இல் நெல்லையில், கூடிய சினாட் கூட்டத்தில் இயேசுவின் மனஉருக்கம், அன்பே சிவம், இரக்கம் நிறைந்த அல்லா, மனது உருக்கத்தின் கடவுள் புத்தர் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரு புதுவித ஜெபத்தை ஏறெடுத்ததை அப்பத்திரிக்கை கண்டித்திருக்கிறது.

## 2. துர் உபதேசங்களின் உச்ச நிலை :

I தீமோத்தேயு 4–ஆம் அதிகாரம் முதல் மூன்று வசனங்களில் சொல்லியுள்ளபடி இந்தக் கடைசிக் காலத்தில் வஞ்சிக்கும் ஆவிக்கு இடங்கொடுத்து புதிய நூதன உபதேசங்களை பலர் ஊதிக் கொண்டு திரிகிறார்க்ள.

திரித்துவத்தை மறுதலித்து இயேசுவின் நாமத்தில் மாத்திரம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும், விசுவாசத்தினால் வரும் நீதியை மறுதலித்து கிரியைக்கு முதலிடம் கொடுத்து ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஓய்ந்திருந்து ஆராதிக்க வேண்டும் என்றும் கூறி சிலர் பலரை கிருபையை விட்டுத் தூரத் தள்ளுகிறார்கள்.

வேறு சிலரோ தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி ஞானஸ்நானம் தேவையில்லையென்றும் பரலோகத்திலிருந்து வந்த தேற்றரவாளனாகிய பரிசுத்தாவியை பரிகசித்து அபிஷேகமுமில்லை – அந்நிய பாஷையில்லை என்றும், தேவ சித்தத்தை மறுதலித்து இரகசிய வருகை இல்லை – மரணத்துக்குப் பின் நியாயத் தீர்ப்பு இல்லையென்றும், நூதன உபதேசங்களாகிய களையை சபையாகிய தோட்டத்தில் விதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



## 3. சமுதாயத்தில் நிறைவேறும் அடையாளங்கள் :

இந்த முழு உலகின் எல்லாப் பக்கங்களிலும் மாறி வருகின்ற பெரும் அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் எல்லாம் திருமறையில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களின்படியே நடந்தேறி வருகிறது.

சிதைந்து போன ரோம சாம்ராஜ்ஜியம் மீண்டும் தலையெடுப்பது கடைசிக் காலத்துக்குரிய அடையாளமாகும். சிதைந்து போன ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த தேசங்கள் மீண்டும் (E.E.C. ஐரோப்பிய பொருளாதாரக் கழகம்) என்ற பெயரில் ஒருங்கிணைந்து வல்லரசாக எழும்பி வருவது குறிப்பிடத் தக்கது.

அமெரிக்க ருஷ்ய வல்லரசுகளைக் காட்டிலும் அதி உன்னத வளர்ச்சியும், பொருளாதார செழுமையும், உலக நாடுகளுக்குக் கடன் கொடுத்து கட்டி வைக்கும் வலிமையும் இந்த E.E.C. பெற்றிருக்கிறது. தானியேல் 7 : 24 இலும் வெளிப்படுத்தல் 12 : 17 இலும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலே இவை.

உலக அரங்கில் நாடுகளிடையேயும் ஜாதிகளிடையேயும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆயுதக் குறைப்பு போன்றவைகள் I தெசலோனிக்கேயர் 5 : 3ன் படி நடந்தேறுகிறது. சமாதானமும் சௌக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல் அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்.

## 4. அறிவியல் உலகில் நிறைவேறும் அடையாளங்கள்:

இந்த உலகத்தில் ஏற்பட்டுவரும் அறிவியில் பூர்வமான

துரித வளர்ச்சிகள் யாவும் கர்த்தரின் வருகைக்கு முன்னடையாளங்களே, நாகூம் 2:4 இல் இரதங்கள் தெருக்களில் கடகடவென்று ஓடி வீதிகளில் இடசாரி வலசாரி வரும் அவைகள் தீவட்டிகளைப் போல விளங்கி மின்னல்களைப் போல் வேகமாய்ப் பறக்கும் என்று எழுதப் பட்டுள்ளது. இந்தத் தீர்க்கதரிசனத்தின்படியே இந்த நூற்றாண்டில் வீதிகளில் போக்குவரத்து ஒழுங்கின்படி இடசாரி வலசாரி கிரமமாய் ஓடும், துரித வேகத் தரைவாகனங்கள் அதி வேகமாய் பெருகிக் கொண்டு வருகிறது.

இத்தீர்க்கதரிசனத்தின் பிற்பகுதியில் சொல்லப்பட்ட படியே தீவட்டிகளைப் போல் மின்னல் வேகத்தில் பறக்கும் ஒலியின் வேகத்தைக் காட்டிலும் பன் மடங்கு துரிதமாய் செல்லும் சூப்பர்சானிக், ஜெட் விமானங்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது.

தானியேல் 12:4 இல் முடிவு காலத்தில் அறிவு பெருகிப் போம் என்று எழுதப்பட்டுள்ளது. இத்தீர்க்கதரிசனத்தின் படியே இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மாபெரும் அறிவியில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சங்கேத மொழியில் தந்தி முறை வந்து அதன்பின் கம்பிகள் மூலம் தொலைபேசி வந்து அதன்பின் மின்காந்த அலைகள் மூலம் வானொலி, தகவல் தொடர்பு வளர்ந்தேறியுள்ளது.

கருப்பு வெள்ளை புகைப்படம் கலர் படமாக மாறி பின்னர் அது திரைப்படமாக வளர்ந்து இப்பொழுது காட்சிகள் மின்னலைகளாக மாறி தொலைதூரத்திற்கு தொலைக்காட்சித் தகவலாய் மாறிவருகிறது.

மெழுகுத் தட்டில் ஒலிப்பதிவு, ஒலி நாடாவிற்கு மாறி தற்பொழுது டிஸ்க்குகளில் பதியுமளவிற்கு வளர்ந்து



வருகிறது. ரேடியோ, வீடியோ, ஸ்கேனர், ராக்கெட், லேசர் கருவிகள், கால்குலேட்டர்கள், காலத்தையும் கணக்கையும் காலநிலையைத் துல்லியமாய்க் காட்டும் கம்பியூட்டர்கள் இவைகள் யாவும், சிலிக்கான் சிப்புகளின் மூலம் சொல்லொண்ணா முன்னேற்றம் கண்டிருக்கிறது.

தீப்பந்தங்கள் மெழுகுதிரிகளாகி, எண்ணெய் விளக்குகளாகி எடிசன் காலத்தில் மின்குமிழ் விளக்காகி பின்னர் குழல் விளக்காகி இன்று ஆவிகள் நிரப்பப்பட்ட விளக்காகி இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கிறது.

மருத்துவ ரீதியில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள் ளதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கண்களை சோதிக்கக் கம்பியூட்டர்கள், கருவறையிலுள்ள பிள்ளையைக் காண ஸ்கேனர்கள், அறுவைச் சிகிச்சை இல்லாமல் சிறுநீரகக் கற்களை அகற்ற லேசர் கருவிகள் ஆகியவற்றின் உதயங்கள், உபயங்கள் எல்லாம் உன்னதரின் வருகை சீக்கிரம் என்பதை உலகத்திற்கு உரைத்துக் கொண்டிருக் கின்றன.

## 5. இயற்கையில் நிறைவேறும் அடையாளங்கள் :

கர்த்தருடைய வருகைக்கு முன்பாக சூரியன் அந்தகாரப்படும் சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்று மத்தேயு 24:29 இல் இயேசு கூறியுள்ளார். இந்தத் தீர்க்கதரிசனத்தின் படி வானவெளியில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இந்த நூற்றாண்டில் ஏராளமான நட்சத்திரங்கள் எரிந்து பூமியில் விழுகின்றன. இவைகளுக்கு அஸ்ட்ராய்டுகள் என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். அவைகள் பெரும்பாலும் துருவப்

பகுதியாகிய அண்டார்டிகாவில் விழுந்து கொண்டிருக்கிறது. சூரியன் தன் அளவில் பெரியதாகவும் நிறத்தில் செந்நிறமாகவும் மாறிக்கொண்டிருப்பதை அறிவியலார் கண்டுபிடித்துள்ளனர்.

வேதமும் சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்த மாகவும் மாறும் என்று கூறுகிறது. சூரியனில் இப்பொழுது கரும்புள்ளிகள் தோன்றியிருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கரும்புள்ளி களில் வெப்பநிலை மிக அதிகமாக உயர்ந்து வருகிறது. சூரியனின் வெப்ப ஏற்றத்தினால் காந்தப் புயல் பூமியில் வீசக்கூடும் என்றும் இந்த உயர் அழுத்தக் காந்தப் புயலினால், தற்போது பூமியில் இயங்கிக் கொண்டிருக்கும் மின் மற்றும் மின்னணு சாதனங்கள் மாபெரும் நாசத்திற்குள்ளாகும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

விண்ணில் மாத்திரமா இந்த நிலை? மண்ணிலும் மாபெரும் மாற்றங்கள் பஞ்சங்களும் கலகங்களும் பரவலாக எல்லா இடங்களிலும் உச்சநிலை அடைந்திருக்கிறது. உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பூமியதிர்ச்சிகள் ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு விஜயம் செய்து மாபெரும் சேதத்தை விளைவித்து சமீபகாலமாய் இந்தியாவுக்கும் வந்திருக்கிறது.

இந்தியாவின் இரு கோடிகளான இமயத்திலும் குமரியிலும் அவ்வப்போது பாதிப்பை ஏற்படுத்தின இந்தப் பூமியதிர்ச்சி இவ்வாண்டுத் துவக்கத்தில் தமிழகத்தின் தலைநகரிலும் தலையை நுழைத்திரப்பதாக தகவல் சாதனங்கள் பதிவு செய்திருக்கிறது.

92 ஜனவரியில் லேசான நிலநடுக்கம் சென்னையில் ஏற்பட்டதாக பத்திரிக்கை குறிப்பு கூறுகிறது. ஏன் லேசாக



வந்தது தெரியுமா? தூங்கிக் கிடக்கும் தமிழ்க் கிறிஸ்தவர் களுக்கு வருகையைக் குறித்து எச்சரிப்புக் கொடுக்கவே! மனந்திரும்பினால் மணவாட்டியாகப் போகலாம். இல்லாவிட்டால் மண்ணுக்கடியில் போக நேரிடும், ஆயத்தப்படுங்கள்.

இந்த மூன்றாம் பதிப்பு வெளிவருவதற்கு முன்பாக 2001 ஆண்டுக்குள் வடமாநிலம் உள்பட தமிழகத்தின் தலைநகர் முதல் தென்காசி உட்பட பலமுறை பலமான நில அதிர்வுகள் வந்து விட்டன. உஷார்! உஷார்! விசுவாசிகளே உஷார்.

## 6. யூத ஜனத்துக்குள் நிறைவேறும் அடையாளங்கள்:

நாம் இதுவரை கண்ட வருகைக்கு முன்னான நிறைவேறின அடையாளங்களைப் பார்க்கிலும் இப்பொழுது கவனிக்கப் போகின்ற தீர்க்கதரிசன நிறைவேறுதல் அதிமுக்கியமான ஒன்றாகும். அது யூதர்களைக் குறித்த தீர்க்கதரிசனமே. யூதர்களைக் குறித்து தேவன் சொல்லும் போதும் தமது வருகையைக் குறித்து பேசும்போதும் யூதர்களை அத்திமரத்திற்கு ஒப்பிட்டு இயேசு கிறிஸ்து பேசினார்.

அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள் அதில் இளங்கிளை தோன்றி துளிர்விடும் போது வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். மத்தேயு 24 : 32,33

இயேசு கிறிஸ்துவை சிலுவைக்கு ஒப்புக் கொடுக்கும் போது இந்த சாபம் எங்கள் மேலும் எங்கள் சந்ததி மேலும் இருக்கட்டும் என்று யூதர்கள் துணிகரமாய் சொன்னார்கள்.

அவர்கள் வாயின் வார்த்தையின் படியே தேவன் அவர்களை நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார். கி.பி. 70–இல் தீத்து இராயன் படையெடுப்பால் அநேக யூதர்கள் மரித்தார்கள். பலர் ஜீவன் தப்பதேசாந்திரிகளாய் ஓடினார்கள். தேவாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. தீத்து இராயனின் ஆட்களினால் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி தேவாலயம் இடிக்கப் பட்டு உருகின நிலையிலிருந்த தங்கம் முதற்கொண்டு சூறையாடப்பட்டது. ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் இராயன் படையெடுப்பால் பட்டுப் போயிற்று.

உலக வரலாற்றில் சுமார் 18 முழுமையான நூற்றாண்டுகள் சொந்த தேசமில்லாமலே அலைந்து திரிய வேண்டியதாயிற்று. ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது? இயேசுகிறிஸ்து வருவதற்கு முன்பாக, பட்டுப்போன அத்திமரமாகிய யூத சாம்ராஜ்ஜியம் இளங்கிளை விட வேண்டும் – துளிர் விட வேண்டும் இதன் பிறகே இயேசுகிறிஸ்து வருவார்.

கி.பி. 70–இல் பட்டுப்போன அத்தியாகிய யூத சாம்ராஜ்ஜியம் துளிர்த்ததா? இளங்கிளை விட்டதா? என்பதனை சில பக்கங்களில் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். பதினெட்டு நூற்றாண்டு காலம் யூதர்களைக் கண்டு கொள்ளாமல் விட்ட தேவன் 19–ஆம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் தமது கிரியையைத் துவக்க ஆரம்பித்தார்.

டாக்டர். தியோடர் ஹர்ஸ்ல் என்ற யூதர் கி.பி. 1897–இல் ஒரு மாபெரும் மாநாட்டைக் கூட்டி சிதறிக் கிடந்த யூதருக்குள்ளே தாயகத்தைக் குறித்த தணியாத தாகத்தை ஏற்படுத்தினார். அவருக்குப் பின் சீயோன் சங்கம் என்ற அமைப்பின் தலைவரான டாக்டர் வைஸ்மான் யூதர்களின் தலைவராக இருந்து யூத மக்களை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.



இந்த சமயத்தில் தான் முதல் உலக யுத்தம் நடந்தது. அச்சமயம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு யுத்த நெருக்கடியான வேளையில் யூதரும் வேதியியல் நிபுணருமான டாக்டர். வைஸ்மான் புதிய வெடி மருந்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். அந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வென்றது மாத்திரமல்லாமல் துருக்கியர் வசமிருந்த பாலஸ்தீன நிலப்பரப்பையும் கைப்பற்றியது.

டாக்டர். வைஸ்மான் கண்டுபிடித்த வெடி மருத்துக்கு நன்றிக் கடனாக அவரின் வேண்டுகோளின்படியே பிரிட் டிஷ் பேரரசு தான் பிடித்திருந்த பாலஸ்தீனப் பகுதிகளை யூதருடைய குடியிருப்பாகக் கொடுத்தது.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் 1917–ஆம் ஆண்டு நவம்பர் 2–ஆம் நாள் பாலஸ்தீனா யூதருக்கு சொந்த நாடாக இருக்கும் என்று விளம்பரப்படுத்தினார். இது பால்பர் அறிக்கை எனப்படும். சொந்த நாடில்லாமல் அலைந்து கொண்டிருந்த யூதர்களுக்கு முதல்உலக யுத்தத்தின் பின்னர் பிரிட்டிஷ் அரசாட்சியின் மேற் பார்வையில் யூதரின் குடியிருப்பு நாடாக பாலஸ்தீனா மாறிற்று.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு 1948–மே 14–ஆம் தேதி பூரண சுதந்தர நாடாக மாறியது. அதற்கு அம்மக்களால் இஸ்ரவேல் என்று பேரிடப்பட்டது. அந்நாடு, ரஷ்யா உட்பட பல உலக நாடுகளினால் அங்கீகரிக்கப் பட்டு ஐ.நா.வில் அங்கமாகிறது. அந்நாட்டின் முதல் ஜனாதிபதியாக டாக்டர். வைஸ்மான் பொறுப்பேற்றார்.

1948–க்குப் பிறகு இந்த 92–ஆம் ஆண்டு வரை எந்த நாடும் முன்னேறாத அளவிற்கு பொருளாதாரத்திலும், அறிவியலிலும், மொழி வளத்திலும் இறையாண்மையிலும் சொல்லொண்ணா அளவிற்கு சீரீய வளர்ச்சி பெற்றிருக்

கிறது. 18–நூற்றாண்டுகள் சாகுபடியில்லாமல் இருந்ததினால் மண்வளம் குறையவில்லை. உற்பத்தி இஸ்ரவேலில் மிக உன்னத நிலையிலிருக்கிறது.

தற்போதைய நிலவரப்படி ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய் மதிப்புள்ள பழங்கள், அடைக்கப்பட்ட குழந்தைகளுக் கான பாலுணவு பெருமளவிற்கு முன்னாள் சோவியத் யூனியனுக்கும், மொத்த இரசாயண உற்பத்தியில் 50 விழுக்காடுகளுக்கு மேல் ஸ்பெயின் நாட்டிற்கும், உள்ளாடை உற்பத்திகளை U.K., U.S. போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டுகிறது.

விடுதலை பெற்ற 10 ஆண்டுகளில் இஸ்ரேலிய அரசு எல்லா யூதர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தது மிகப் பெரிய சாதனையாகும். சுற்றுலாத் துறையின் மூலம் ஆண்டொன்றுக்கு 15 பில்லியன் டாலர் உள்நாட்டுக்குள் வருகிறது. இஸ்ரவேலிலுள்ள மூன்று வங்கிகள் உலகத்திலுள்ள இருநூறு பெரிய வங்கிகளின் வரிசையில் சேர்ப்பிக்கப்பட்டு இருப்பதிலிருந்து இதன் நிதி வளத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஒன்றுக்குமே உதவாதென்றெண்ணப்பட்ட சவக் கடலில் சுமார் 2000 ஆண்டுகள் இந்த முழு உலகத்திற்கும் தேவையான பொட்டாஷ், மாக்னீசியம், குளோரின் போன்ற இராசாயணப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதைக் கண்டு பிடித்து அதனை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்த புதிய திட்டங்களை வகுத்துள்ளனர். நிலத்திற்கடியில் பெரிய குழாய் கள் அமைத்து மத்திய தரைக்கடலையும் சவக்கடலையும் இணைத்து சவக்கடலைப் பயனுக்குக் கொண்டு வர திட்ட முன் வரைவுகள் 80–ஆம் ஆண்டே முடிக்கப் பெற்று நிதிச் செலவை முன்னிட்டு திட்டம் ஒத்திப் போடப்பட்டுள்ளது.



இந்தியப் பசுக்களைப் போல் ஏழுமடங்கு பால் கொடுக்கக்கூடிய பசுக்கள் அங்கே இருக்கிறது. சுருங்கச் சொல்லப் போனல் மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த அத்தனை ஆசீர்வாதங்களும் புதிய சுதந்தர இஸ்ரவேலில் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது.

மங்கிப் போன எபிரெயு மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இஸ்ரவேலின் முதல் மொழியாக்கப் பட்டுள்ளது. கல்வி, கலாச்சாரம், அறிவியில் ஆகியவற்றில் மக்கள் திறம்பட வளர மாபெரும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**1942–**இல் இஸ்ரவேல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி
(Isreael Institute of Technology)

**1925–**இல் எருசேலம் – எபிரெய பல்கலைக்கழகம்.
(Hebrew University of Jerusalem)

**1934–**இல் டாக்டர் வைஸ்மான் அறிவியல் பல்கலைக்கழகம்.
(Dr.WEIZMANN University of science)

**1955–**இல் பார் – இலன் பல்கலைக்கழகம்
(Barilan University)

**1956–**இல் டெல்–அவிவ் பல்கலைக்கழகம்.
(TELAVIN University)

**1963–**இல் ஹைபா பல்கலைக்கழகம்.
(Haifa University)

**1967–**இல் பென்–குறியன் பல்கலைக்கழகம்
(Ben-Gurian University)

**1974–**இல் திறந்த வெளி பல்கலைக்கழகம்
(Open University)

போன்ற நிறுவனங்கள் துவக்கப்பட்டு இளைஞர் களுக்கும் வெளிநாடுகளிலிருந்து வந்திறங்கிய முதியவர் உட்பட அனைவருக்கும் சீரான சிறப்பான கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகிறது.

சுதந்தரம் பெற்ற இஸ்ரவேல் ஏறக்குறைய எல்லா ஆண்டுகளுமே யுத்தங்களை சந்தித்திருக்கிறது யுத்தம் செய்வது அதன் அன்றாடக்கடன்களில் வழக்கமான ஒன்றாகி விட்டது. இதுவரை இஸ்ரவேல் சந்தித்த யுத்தங்களில் தன் நிலப்பரப்பை அதிகப்படுத்திக் கொண்டதே தவிர தோல்வியடையவில்லை.

இஸ்ரவேல் தன் சுதந்தரத்திற்குப் பிறகு 5 பெரும் யுத்தங்களை சந்தித்து மாபெரும் வெற்றி கண்டிருக்கிறது. 1979–ஆம் ஆண்டு மார்ச் 26–ஆம் நாள் அமெரிக்காவில் கேம்ப்டேவிட் என்ற இடத்தில் இஸ்ரேலிய பிரதமர் மெனாச்சிம் பிகின் என்பவரும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் என்பவரும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட் டனர். அதனால் எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் சண்டை தற்காலம் வரை தவிர்க்கப்பட்டு வருகிறது.

ஆகிலும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட மற்ற அரபு நாடுகள் சில்லறைத்தனமான சிக்கல்களை உண்டாக்கி வருகிறது.

கேம்ப்டேவிட் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அப்போதைய பிரதமர் கனம் மேனாச் சிம்பிகின் இப்புத்தகத்தை நான் எழுதிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் 9.3.1992 தமது 72–ஆவது வயதில் டெல் அவிவ் மருத்துவமனையில் மரணமடைந்தார். என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆன்மீகத்திலும் இஸ்ரேலில் மாபெரும் எழுப்புதல்



ஏற்பட்டிருக்கிறது. தங்கள் தேவாலயத்தைக் கட்டத் தேவையான சகலவிதப் பொருட்களை சவதரித்து வைத் துள்ள அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்ய லேவி கோத்திரத்தாரைக் கண்டெடுத்து அவர்களை ஆயத்தப்படுத்தி வருகின்றனர்.

என் இனிய வாசகரே! அத்திமரம் துளிர்த்து விட்டது! இளங்கிளை தோன்றிவிட்டது! இன்னும் சொல்லப் போனால் பூப்பூத்து காய்காய்த்து பரிமளித்துக் கொண்டிருக் கிறது. வசந்தகாலம் சமீபமாய் அல்ல. வசந்த காலத்திலேயே இருக்கிறோம்.

# 3

# இயேசுவின் வருகை எப்படி இருக்கும்

முந்தின அதிகாரங்களில் நான் எழுதியிருந்தபடி ஒவ்வொரு பரிசுத்தவான்களின் மரணத்தின்போதும் கிறிஸ்துவின் வருகை நிகழ்வதில்லை. இயேசுவின் வருகை சுலப தவணை திட்டத்தின்படி நடைபெறாது. அப்போஸ்தலனாகிய பவுல் I கொரிந்தியர் 15: 51–இல் சொன்னபடி ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறு ரூபமாக்கப்படுவோம்.

இமைப் பொழுது நாமெல்லோரும் என்ற வார்த்தை களைக் கவனியுங்கள். முழு உலகிலுள்ள எல்லாப் பரிசுத்த வான்களும் ஒரே இமைப்பொழுதில் மறுரூபமாக்கப் படுவார்கள். ஆகவே இயேசுவின் இரகசிய வருகை ஒரே சமயத்தில் ஒரேமுறை மாத்திரம் நடைபெறும்.

ஈண்டு இயேசு சொன்ன காரியத்தை யோசிப்பது ஏற்புடையதாயிருக்கும். இரண்டு பேர் வயலிலிருப்பார்கள் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான் ஒருவன் கைவிடப் படுவான். இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள் ஒருத்தி ஏற்றுக் கொள்ளபடுவாள் ஒருத்தி கைவிடப்படுவாள். ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான். ஒருவன் கைவிடப்படுவான். லூக்கா 17:34–36

மேற்சொன்ன வசனப்பகுதியில் மிகப்பெரிய உண்மை



பொதிந்திருக்கிறது. ஒரே சமயத்தில் இந்த முழு உலகத்தில் மூன்று வித கால நிலைகள் இருக்கிறது. இந்தியாவில் பகலாயிருக்கும் போது உலகின் மற்றொரு பகுதியில் பொழுது சாயும் நேரமாகவும் மற்றொரு பகுதியில் நடு இரவாகவும் இருக்கும்.

இயேசு சொன்ன உவமையில் வயல்வெளி சம்பவம் பகலையும், படுக்கையிலிருப்பது நடு ஜாமத்தையும், திரிகை திரிப்பது மாலை வேளையையும் குறிக்கும், காலச்சித்திரம் அடங்கியிருக்கிறது. எனவே இயேசுகிறிஸ்து எப்பொழுது வந்தாலும் இந்த உலகத்தின் முகத்தே மூன்று காலநிலைகள் இருக்கும். எனவே காலையிலோ, மாலையிலோ, நள்ளிரவிலோ என்று பாடாமல் காலை, மாலை, இரவு ஆகிய மூன்று பொழுதிலும் முழு உலகத்தில் கிறிஸ்துவின் வருகை நிகழும் என்று பாடுவோம்.

### இயேசு எப்படி வருவார் :

இயேசுவின் வருகை இரகசியமாக இருந்தாலும், திருடனைப் போல அவர் வந்தாலும் அவர் அமைதலாய் அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் I தெசலோனிக்கேயர் 4–அம் அதிகாரம் 16,17–இல் சொல்லியுள்ளபடி மூன்று வித சத்தங்களோடு வெளிப்படுவார். ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம் ஆகியவற்றோடு வருவார். இதற்கு ஒரு சிறப்பு நோக்கம் உண்டு.

இயேசுவின் ஊழிய நாட்களில் லாசரு வைக்கப் பட்டிருந்த கல்லறைக்கு முன்பாக வந்து நின்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அதைப் போல் கர்த்தருடைய வருகையின் போது இங்கே ஏறி வா என்கிற ஆரவாரத்தோடு வரும்போது கல்லறையிலுள்ள மரித்தோர் உயிர்த்தெழுவார்கள். மரியாள் எலிசபெத்தை வாழ்த்தின

போது எலிசபெத் வயிற்றிலிருந்த பிள்ளை அந்த வாழ்த்தைக் கேட்டு துள்ளிற்று லூக்கா 1 : 41 அப்படியே கர்த்தருடைய ஆரவார சத்தம் கேட்கும் போது கருவறையிலிருந்த யோவான் துள்ளினது போல கல்லறையிலுள்ள பரிசுத்தவான்கள் துள்ளி எழுவார்கள். ஆம் கர்த்தருக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பழைய ஏற்பாட்டில் எகிப்திலிருந்து புறப்பட்டு கானான் நோக்கி சென்ற இஸ்ரவேலர் நாற்பதாண்டு காலம் கானானுக்கு யாத்திரை செய்தார்கள் மேகம் நிற்கும் போது பாளயம் அடிப்பார்கள். மேகம் புறப்படும்போது பயணம் செய்வார்கள். இதற்காக மோசே இரண்டு எக்காளங்களை செய்து வைத்திருந்தார். புறப்பட வேண்டியதற்கு அடையாளமாக எக்காளத்தை நெடுந்தொனியாய் ஊதுவார்கள். உடனே இஸ்ரவேலர் புறப்படுவார்கள். அதைப் போலவே கர்த்தருடைய எக்காள சத்தம் தொனிக்கும்போது உயிரோடுள்ள பரிசுத்தவான்கள் மறுரூபமடைந்து ஆகாயத்தில் பறந்து செல்வார்கள்.

இப்படி உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் மறுரூபமாக்கப்பட்ட பரிசுத்தவான்களும் ஆகாய மண்டலத்திற்கு செல்லும் போது அங்கே ஒரு காரியம் நடக்கும். எபேசியர் 6:12–ன் படி வான மண்டலங்களில் பொல்லாத ஆவிகளின் சேனை இருக்கிறது. அந்த ஆவிகள் இந்த எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணும், குற்றம் சாட்டும், மோசே மரித்தபின்பு அவனுடைய சரீரத்தைக் குறித்து பிரதான தூதனாகிய மிகாவேலுக்கும் பிசாசுக்கும் தர்க்கம் உண்டானது என்று யூதா நிருபம் 1:9 –இல் வாசிக்கிறோம். அவ்வண்ணமே அவர் வருகையின் போது எல்லா பரிசுத்தவான்களுக்கு விரோதமாக சாத்தான் வருவான்.



ஆகிலும் வெளிப்படுத்தின விசேஷம் 12:7ன்படி பிரதான தூதனாகிய மிகாவேலும்அவனுடைய தூதர்களும் சாத்தானோடு யுத்தம் பண்ணி வலுசர்ப்பத்தையும் அவனைச் சார்ந்த தூதர்களையும் பூமியிலே தள்ளுவார்கள். இதைத்தான் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் என்று I தெசலோனிக்கேயர் 4 : 16–இல் வாசிக்கிறோம்.

ஆக மரித்த பரிசுத்தவான்களை உயிர்ப்பிக்க ஆரவார சத்தமும், உயிரோடுள்ள பரிசுத்தவான்களை மறுரூபப்படுத்த தேவ எக்காளமும், ஆவிகளின் சக்திகளை அழிக்க பிரதான தூதனுடைய சத்தமும் கர்த்தரின் வருகையின்போது தொனிக்கும்.

இன்றைய உலகளவில் 10 பேருக்கு ஒருவர் கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். இப்படி கிறிஸ்துவை அறிந்தவர்களின் பத்தில் ஒருவர் என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் ஒரே சமயத்தில் மாபெரும் மக்கட் தொகை இழப்பு இந்த உலகத்திற்கு ஏற்படும். எடுத்துக் கொள்ளப்படுகிற பொழுது எவரெவர்கள் எந்தெந்த இடத்தில் இருந்தார்களோ அந்தந்த இடத்திலிருந்தே மறுரூபமாக்கப்படுவதால் அவர்கள் செய்து கொண்டிருந்த பணி பாதியிலே நிறுத்தப்படும்.

சற்று யோசித்துப் பாருங்கள். ஒரேநாளில் கல்வி நிறுவனங்களில் ஏராளமான மாணாக்கர்கள் காணப்படாமற் போவார்கள். பல ஆசிரியப் பெருந்தகைகள் காணப்படாமற்போவார்கள். பேருந்துகள் ஓடிக்கொண்டு இருக்கும். விசுவாசிகளான ஓட்டுநர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் ஓட்டிக் கொண்டு வந்த வாகனம் தொடர்ந்து சாலையில் செல்லுமா? சிற்றுண்டிச் சாலைக்குள் செல்லுமா? என்று யாராலும் நிதானிக்க முடியாது.

ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு கூட்டம் காணாமற் போயிருக்கும். எல்லா தேசங்களிலும் ராஜ்யங்களிலும் வீடுகளிலும் மாபெரும் குழப்பம் ஏற்படும். இந்த உலகமே ஸ்தம்பித்து நிற்கும் நிலை ஏற்படும். தன் குடும்ப அங்கத்தினரை இழந்த மற்றவர்கள் கதறி அங்கும் இங்கும் தேடுவார்கள். அங்காடிகள் மருத்துவமனை காவல்துறை நீதித்துறை போக்குவரத்து எல்லாமே மாபெரும் குழப்பத்தை சந்திக்கும். இந்த உலகம் தன் இயல்பான நிலைக்குத் திரும்ப எத்தனை நாள் ஆகும் என்று யாராலும் கணித்து சொல்ல முடியாது.

**எவர்களெல்லாம் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் :**

கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவப் பள்ளியில் பயின்று கிறிஸ்தவ பெயர் வைத்துக் கொண்டு கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்று கொண்டு அரைகுறை கிறிஸ்தவ வாழ்க்கை செய்தவர்கள் கர்த்தரின் வருகைக்குப் பின்னும் இந்தப் பூமியில் பத்திரமாய் இருப்பார்கள்.

இவ்விடத்தில் இயேசு சொன்னதைக் கவனித்துப் பாருங்கள். நோவா காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். ஜலப்பிரளயத்திற்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப் பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் மத்தேயு 24:37–39.

இன்றைய கிறிஸ்தவ உலகம் உணர்வில்லாமல் உலகத்தில் இவ்வசனத்தின்படி உழன்று கொண்டிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. ஊழியர்கள் உட்பட பலர்



கிறிஸ்மஸ் அலங்காரத்திற்கும், ஈஸ்டர் அலங்காரத்திற்கும் கொடுக்கிற முக்கியத்துவத்தை கர்த்தரின் வருகைக்குக் கொடாதிருப்பது கவலைக்குரியதே.

ஆண்டுகள் தோறும் விழா எடுப்பதற்கு ஆவல் இருக்கிறதே தவிர அன்பரின் வருகையைக் குறித்த அக்கறை யாருக்கும் இல்லை. பல இடங்களில் சபைக் குழு தேர்தலில் ஏற்படும் போட்டிகளும் அதற்கென்று நடைபெறும் ஆள் கடத்தல்களும் ஓட்டுக்காகப் பரிமாறப்படும் சீமை மதுவகைகளும் எவ்வளவு தூரம் கிறிஸ்தவ உலகம் சீர் கெட்டுவிட்டது என்று வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டோர் வருகைக்குப் போக முடியுமா?

இந்தியாவில் பரவாயில்லை இத்தோடு நின்று விட்டது. மேலை நாடுகளில் மாபெரும் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. ஆணை ஆண் மணமுடித்துக் கொள்வதற்கும், பெண்ணை பெண்ணே மணமுடித்துக் கொள்வதற்கும் திருச்சபைகளுக்குள்ளேயே அங்கீகாரம் வழுங்கப்பட்டிருக்கிறது.

இதிலும் துயரத்திற்குரிய செய்தி என்னவென்றால் ஒரு ஆணையே மணமுடித்துக் கொண்ட ஆண் போதகரை ஒரு சபை அங்கீகரித்து ஊழியம் செய்ய வைத்திருக்கிறது. தேவ சித்தத்திற்கு விரோதமான இப்படிப்பட்டவர்களும் அவர்களின் போதனையைக் கேட்பவர்களும் அவரின் வருகையில் எப்படி எடுத்துக் கொள்ளப்பட முடியும்?

சமுதாய நோக்கோடு செயல்படுகிறோம் என்று சொல்லிக் கொண்டு கிறிஸ்தவ சமுதாயக் கோட்பாடுகளை அடகு வைத்திருக்கும் சில போதகமார்கள் இங்கு உண்டு தேவன் அன்பாகவே இருக்கிறார், அன்பே சிவம் எல்லா மார்க்கமும் ஒன்றையே போதிக்கிறது என்று ஒத்துப் போகும்

உபதேசத்தை ஊதிக் கொண்டு திரியும் ஒருசிலர் திருச்சபையைக் களங்கப்படுத்தும் அசுத்தங்கள். அவர்களும் அவர்களின் உபதேசத்தைக் கேட்பவர்களும் கர்த்தருடைய வருகையில் எப்படி எடுத்துக் கொள்ளப்பட முடியும்?

இப்படி சொல்லிக் கொண்டே போனால் என் புத்தகம் நீண்டு கொண்டே போகும். ஆகவே யார்தான் வருகையின் போது எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை தெளிவாக எழுதி விடுவது நலமாயிருக்கும்.

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமுடியாது என்றும் யோவான் 3 : 3 ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்றும் யோவான் 3 : 5 இயேசு கிறிஸ்து தாமே சொன்ன அடிப்படை சத்தியங்கள் மிகவும் முக்கியமானவைகள்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனெவனோ அவன் இரக்கம் பெறுவான் என்ற வார்த்தையின்படி பாவங்களை அறிக்கையிட்டு அவைகளை விட்டு விடத் தீர்மானித்து மனந்திரும்பி வாழ வேண்டியது முதலாம் தகுதியாயிருக்கிறது.

இப்படி மனந்திரும்பி மறுபடியும் பிறந்தவர்கள் ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்பது தேவனின் ஒழுங்காய் இருக்கிறது. வேதம் சொல்லுகிறபடி விசுவாசமுள்ளவனாகி மாற்கு 16:16 பாவ மன்னிப்பின் நிச்சயத்திற்கென்று அப் 2: 38 கிறிஸ்துவைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாக 1 பேதுரு 3 : 21 ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இது மூழ்கியா? தெளிப்பா? என்று மூளையிலிருந்து



கேள்விகள் கேட்கக்கூடாது. எபேசியர் 5 :26–இல் தண்ணீர் முழுக்கினாலும் என்றும், தீத்து 3:5 இல் மறு ஜென்ம முழுக்கினாலும் என்றும் சொல்லப்பட்டபடியே மூழ்கித்தான் எடுக்க வேண்டும்.

சிலுவைக் கள்ளன் ஞானஸ்நானம் எடுத்தானா? என்று சில உபதேசக்கள்ளர்கள் கேள்வி கேட்பது வேதனைக்குரியதே. சிலுவைக்கள்ளன் ஞானஸ்நானம் பெறாமல் பரதீசுக்குள் பிரவேசித்தது குறித்து மிகச் சரியான கருத்துக்கள் பலவற்றினை கர்த்தருடைய தாசர்கள் பலர் மிகக் கருத்தாய் எழுதியும் பேசியும் வருகிறார்கள். அந்தக் கருத்துக்களை இப்பொழுது மீண்டும் கோடிட்டுக் காட்ட நான் விரும்பவில்லை. எனக்குத் திருப்தியளிக்கக் கூடிய ஒரே ஒரு பதிலை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

சிலுவைக் கள்ளன் ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியமில்லை. புதிய ஏற்பாட்டு சபைக்கான திருமுழுக்கின் அதிகாரப்பூர்வமான சட்டத்தை இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிச் செல்லும்போதுதான் சொன்னார். வாசித்துப் பாருங்கள் மத்தேயு 28: 16 முதல் 20 வரை சிலுவைக் கள்ளன் உயிர்தெழுதலுக்கு முன்பே மரித்ததினால் அவர் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் பட்டியலில் சேருகிறார். எனவே அவர் திருமுழுக்கு எடுக்காமலேயே நித்திய இராஜ்யத்தில் பங்கடைவார்.

ஆகவே குதர்க்கமான கேள்விகளைக் கேட்டு நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கும் தேவ பிள்ளையே! பரிசேயரும், நியாய சாஸ்திரிகளும் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையாகிய ஞானஸ்நானத்தைத் தள்ளிவிட்டது போல லூக்கா 7:30 நீயும் உனக்குக் கேடுண்டாக்கிக் கொள்ளும்படி ஞானஸ்நானத்தை அலட்சியப்படுத்தாதே.

மூழ்கி ஞானஸ்நானம் பெறாத எந்த நபரும் கொடுக்கும் சந்தர்ப்பவாத ஞானஸ்நானத்தை நீ ஏற்றுக் கொள்ளாதே. அடிப்படை உபதேசத்தை அனுபவமாகக் கொண்டிராதவர்கள் கொடுக்கும் ஞானஸ்நானம் உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையாது.

ஜலத்தினால் பிறப்பது மாத்திரமல்ல இயேசு கிறிஸ்து சொன்னபடி யோவான் 3:5 ஆவியினால் பிறக்க வேண்டியது அவசியம். ஆவியின் அபிஷேகம் பெந்தெகொஸ்தேகாரர்கள் கண்டுபிடித்த உபதேசமல்ல. இயேசுதாமே வாக்குசெய்த மகிமையான அனுபவம்.

என்றென்றும் நம்மோடு இருக்கும்படியாய், எல்லா சத்தியத்திற்குள் நடத்தும்படியாய் இறங்கி வந்த பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். நான் இரட்சிக்கப்பட்டதே பரிசுத்தாவியால்தான். ஆகவே தனியாக அபிஷேகம் தேவையில்லையென்று தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். மரியாள் பரிசுத்தாவியினால்தான் இயேசுவைப் பெற்றார். ஆனால் அவரும்கூட அப்போஸ்தலர் காலத்தில் காத்திருந்து பரிசுத்த ஆவி பெற்றார் என்று வாசிக்கிறோம்.

எனவே ஒரு கிரியை நம்மேல் நடப்பிக்க ஆவியானவர் நம்மோடு இடைபடுவது வேறு, நம்மில் எந்நாளும் தங்கியிருக்கும்படி நம்மில் வருவது வேறு. அப்போஸ்தல நடபடிகளில் ஞானஸ்நானம் பெற்ற அநேகர் வெவ்வேறு கால கட்டங்களில் பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு ஆதாரங்கள் இருக்கிறது. வாசித்துப் பாருங்கள்.

வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்பட பரிசுத்தாவியின் அபிஷேகம் அவசியம். ரோமர் 8:11–இல் கிறிஸ்தேசுவுக்குள்ளேயிருந்த ஆவியானவர் உங்களுக்



குள்ளே வாசமாயிருந்தால் அவரை உயிரோடு எழுப்பினது போல உங்களையும் மரணத்தினின்று உயிரோடு எழுப்புவார் என்று பவுல் சொல்லியிருக்கிறார். ஆகவே கர்த்தரின் நாளில் உயிரோடு எழும்ப வேண்டுமானால் பரிசுத்தாவியின் அபிஷேகம் அவசியம்.

தலைமை அப்போஸ்தலராகிய பேதுரு தன்னுடைய முதலாவது பிரசங்கத்தில் அப்போஸ்தலர் 2:38 நீங்கள் மனந்திரும்பி..... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்... பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று எழுதியிருப்பதை சிந்தையில் வையுங்கள்.

மறுபடியும் பிறத்தல், ஜலத்தினால் பிறத்தல் ஆவியினால் பிறத்தல் ஆகிய அனுபவங்களோடு சத்தியத்தைக் கைக்கொள்ளுகிற உத்தம கூட்டத்தாரே ஏசாயா 26:2 வருகையில் பறந்து செல்வார்கள். இந்த அடிப்படை அனுபவங்களைப் பெறாதவர்கள் பாரபட்சமின்றி கைவிடப்படுவார்கள்.

## இரகசிய வருகைக்குப்பின் என்ன நடக்கும்:

இரகசிய வருகையின் போது எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் மத்திய வானில் ஏழாண்டு காலம் இயேசுவோடு ஆனந்திப்பார்கள். கைவிடப்பட்டவர்களோ இந்தப் பூலோகத்தில் சொந்த ஜனங்களினாலும் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியினாலும் மாபெரும் உபத்திரவத்தை சந்திப்பார்கள்.

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சி எங்கோ ஒரு மூலையில் நடைபெறப் போகிற சாதாரண ஆட்சி அல்ல. இந்த முழு உலகத்தையும் ஆளப்போகிற ஒற்றை மனிதனின் நேரடி ஆட்சி. பல்வேறு பிரதிநிதிகள், கண்காணிக்கும் கம்பியூட்டர்கள் ஆகியவற்றின் துணையோடு ஒரே மனிதன் இந்த

முழு உலகையும் ஒரே சமயத்தில் ஆட்சி செய்வான்.

அவனது ஆட்சியில் உலகத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தனித்தனியே அடையாள எண்ணும் அவனது அடையாள முத்திரையும் கொடுக்கப்படும். அந்திக் கிறிஸ்துவை வணங்குகிறவர்களுக்கு மாத்திரமே அந்த முத்திரை கொடுக்கப்படப் போகிறபடியால் அவனை வணங்காமல், கிறிஸ்தவ விசுவாசம் கொண்டிருப்பவர்களுக்கு உபத்திரவமும் சித்திரவதையும் கொடூரமான தண்டனையும் கொடுக்கப்படும்.

அவனை ஏற்றுக் கொண்டு முத்திரை தரித்தவர்கள் உலகப்பிரகாரமான பொருட்களைப் பெற்றுக் கொண்டாலும் உன்னதத்திலிருந்து சொரியப்படும் வாதையினால், எகிப்தியர் பட்டதுபோல் உபதத்திரவப்படுவார்கள், கைவிடப்பட்டவரின் பாடு படுதிண்டாட்டமாக இருக்கும்.

இந்த ஏழாண்டுகால அந்திக் கிறிஸ்து ஆட்சியில் இந்த உலகம், தத்தளிப்பையே தண்ணீராய்க் குடித்துக் கொண்டிருக்கும். அதே வேளையில் எடுத்துக் கொள்ளப் பட்ட பரிசுத்தவான்கள் இயேசுவோடு ஆகாய மண்டலத்தில் ஆனந்திப்பார்கள். நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்ற வார்த்தையின்படியே எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்று அவரவர் காத்துக் கொண்ட பரிசுத்த ஜீவியம், செய்த தியாகம், நிறைவேற்றின ஊழியம், வழி நடத்தின ஆத்துமாக்கள் இவைகளுக்கேற்ற மகிமையின் பலன்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

பரிசுத்தவான்கள் யாவரும் பொதுவாக நட்சத்திரங்கள் என்று அழைக்கப்பட்டாலும் நட்சத்திரத்திற்கு நட்சத்திரம்



பிரகாசம் வித்தியாசப்படுகிறது போல பரிசுத்தவான்களின் பிரயாசத்திற்கு ஏற்ற மகிமையும் வித்தியாசமாக இருக்கும். அப்போஸ்தலனாகியப் பவுல், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று தீமோத்தேயுவுக்கு நிருபத்தில் குறிப்பிட்டிருப்பது போலவே கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் விசுவாச மார்க்கத்தார் யாவருக்கும் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 1: 7—ன் படி நாம் இராஜாக்களாக மாற்றப்பட்டிருக்கிறோம் வெளி 20:6—ன் படி இந்த பூமியை இயேசுவோடு சேர்ந்து ஆயிரம் வருடம் ஆளப்போகிறோம் இராஜாக்கள் என்றால் நிச்சயமாகக் கிரீடம் இருக்க வேண்டுமல்லவா! ஆகவே எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கிரீடம் உண்டு. சில பிரத்தியேகமான கிரீடங்களைக் குறித்து வேதபுஸ்தகத்தில் வெளிப்படையான ஆதாரம் உண்டு.

ஜெய ஜீவியம் செய்தவர்களுக்கு I கொரி 9 :25—ன் படி அழிவில்லா கிரீடமும், ஆத்தும ஆதாயம் செய்தவர்களுக்கு I தெசேலானிக்கேயர் 2:19—ன் படி மகிழ்ச்சியின் கிரீடமும், சோதனையை சகித்து ஜெயம் பெறுகிறவர்களுக்கு யாக்கோபு 1:12—ன்படி ஜீவ கிரீடமும், மந்தைக்கு மாதிரிகளாயிருந்த ஊழியர்களுக்கு Iபேதுரு 5:4—ன்படி மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள்.

இவைகள் மாத்திரமா? மல்கியா 3:17,18—ன்படி அவருடைய சம்பத்தை சேர்க்கும் நாளில், எனக்கு ஊழியம் செய்தவனுக்கும் ஊழியம் செய்யாதவனுக்குமுள்ள வித்தியாசத்தை திரும்பவும் காண்பிப்பேன் என்ற வாக்கின்படி தூதர்களுக்கு கூட அருளப்படாத இந்த திவ்ய ஊழியத்தில் உண்மையாயிருந்தவர்களுக்கு ஒரு மகிமையின்

வித்தியாசத்தை தேவன் நிச்சயமாய்க் கட்டளையிடுவார்.

இரண்டு தாலந்தை நான்காக்கினவனையும் ஐந்து தாலந்தை பத்தாக்கினவனையும் அவர்களின் பிரயாசத்திற்கு ஏற்ப பட்டணங்களுக்கு அதிபதியாக எஜமான் மாற்றினான் என்று இயேசு சொன்னது போல எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் ஆயிர வருட அரசாட்சியில் எங்கெங்கு ஆளவேண்டுமென்கிற அதிகார ஆணையையும் அவர்களுக்குக் கொடுப்பார்.

இவைகளெல்லாம் நிர்ணயிக்கப்பட்டு, முடியும்போது இங்கு பூலோகத்தில் அந்திக் கிறிஸ்துவின் ஏழாண்டு கால ஆட்சி முடிந்துவிடும். அப்போது இயேசுதாமே பூமியை ஆளும்படியாகவும், பரிசுத்தவான்களோடு இந்த பூமியை ஆளும்படியாகவும், ஆறுதல் தேடி அலையும் ஆபிரகாமின் சந்ததியாகிய இஸ்ரவேலரை ஆறுதல் படுத்தும்படியாகவும் அக்கிரமக்காரனாகிய அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாகவும் இந்த அவனிக்கு இறங்கி வருவார்.

**உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் எப்படியிருப்பார்கள்**:

பரிசுத்தவான்களின் சரீரம் மறுமை இராஜ்ஜியத்தில் எப்படியிருக்கும்? என்ற கேள்விக்கு அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 15–ஆம் அதிகாரத்தில் விலையேறப் பெற்ற சத்தியங்களை விளக்கமாக எழுதியுள்ளார்.

குறிப்பாக 53–ஆம் வசனத்தில் மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் என்றும், அழிவுள்ளதாகிய இது (பூமிக்குரிய சரீரம்) அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும் என்று எழுதியிருக்கிறபடி மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் என்று தெரிகிறது.



மண்ணானவனாகிய முதலாம் ஆதாமின் சாயலை நாம் அணிந்திருக்கிறது போல வானவராகிய கிறிஸ்துவின் சாயலையும் அணிந்து கொள்வோம் என்று 49–ஆம் வசனத்தில் மீண்டும் பவுல் கூறுகிறார். ஆகவே மரித்த பரிசுத்தவான்களும் மறுரூபமாக்கப்பட்ட பரிசுத்தவான்களும் ஒரு விசேஷமான வானத்துக்குரிய மேனியை பெற்றுக் கொள்வார்கள்.

அந்த வானத்துக்குரிய மேனி இயேசுவின் மகிமையின் சாயலுக்கு ஒப்பானதாய் இருக்கும். இதையே அப்போஸ்தலனாகிய யோவான். அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் (Iயோவான் 3:2) என்று எழுதியிருக்கிறார்.

கர்த்தருடைய வருகையில் நாம் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ளக்கூடுமா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். மகிமை சமச்சீராக இருந்தாலும் முகச்சாயல் மாறாது என்று நம்புகிறேன். வசனத்தில் அதற்குரிய போதிய ஆதாரம் உண்டு.

இயேசு மறுரூப மலையில் மகிமையில் நிறைந்திருந்த போது மோசேயும் எலியாவும் அவரோடு சம்பாஷித்தார்கள். அக்காட்சியைக் கண்ணுற்ற சீஷர்கள் உமக்கொரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமும் போடலாமென்று கேட்டதிலிருந்தே உயிர்த்தெழுந்த சரீரத் திற்கு முகச்சாயல் மாறாதென்று தெளிவாகத் தெரிகிறது.

அது மாத்திரமல்ல நாம் மறுரூபப்படும் போது நம்முடைய அறிவும் ஞாபக சக்தியும் ஞானமும் கூட மறுரூபப் படும். ஆகவே நித்தியத்தில் நாம் சந்திக்கப் போகிற எவரையும் எவரும் அறிமுகப்படுத்தாமேலேயே அறிந்து

கொள்ள முடியும். இப்பொழுதே வெளிப்பாட்டு வரங்களை திருச்சபைக்குக் கொடுத்துக் கடந்த கால சம்பவத்தை வெளிப்படுத்துகிறார். பூலோகத்திலே இது சாத்தியமென்றால் மகிமையிலும் இது சாத்தியமாகும் என்பது அதிக நிச்சயமல்லவா?

கிறிஸ்துவின் நாளில் அங்கவீனராய் மரித்தவர்களும் விபத்தில் சிதைந்து மரித்தவர்களும் அந்தந்த நிலையிலே அல்ல. முழுமையாக்கப்பட்ட சரீரத்தோடு உயிர்த்தெழுவார்கள். மறுரூபப்படுவார்கள். குருடரின் கண்கள் திறக்கப்பட்டு செவிடரின் காதுகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான். ஊமையன் நாவு கெம்பீருக்கும் ஏசாயா 35:5,6 என்ற வார்த்தையின்படி அவர் வகையில் பூரண சரீரத்தோடு பரிசுத்தவான்கள் எழுந்திருப்பார்கள்.

மேலே சொன்ன இந்த வாக்குத்தத்தம் ஆயிர வருட அரசாட்சியிலும் இந்த பூமியில் மீண்டும் நிறைவுறும்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து பேசினார் சீஷர்கள் அவரைத் தொட்டுப் பார்த்தார்கள். இயேசுவும் அவர்கள் விசுவாசிக்கச் செய்யும்படி போஜனத்தைப் புசித்துக் காண்பித்தார். இப்படியிருக்க, பூட்டப்பட்ட அறைக்குள்ளேயும் இயேசு பிரவேசித்தார் என்று வேதம் சொல்லுகிறது.

இயேசுவைப் போன்றே பரிசுத்தவான்களுக்கும் ஆவிக்குரிய மேனி உண்டாயிருக்கும். உருவமிருக்கும் உணர்வு இருக்கும். அதே வேளையில் தாங்கள் சரீரத்தை தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் ஒரு புதிய வல்லமையும் இருக்கும். ஆகவே அவர்கள் நினைத்த மாத்திரத்தில் பூட்டபட்ட அறைக்குள் மாத்திரமல்ல. புளியம்பட்டிக்கும் போகலாம். பூனாவுக்கும் போகலாம். இப்படிப்பட்ட சிறப்பு மேனியோடுதான் நாம் மகிமையிலிருக்கப் போகிறோம். எத்தனை மகிமையான அனுபவங்கள் பார்த்தீர்களா?



**கைவிடப்பட்டவர்களின் நிலை எப்படியிருக்கும் :**

அந்திக் கிறிஸ்துவின் ஏழாண்டு கால ஆட்சியில் முதல் 3 ஆண்டுகளில் கைவிடப்பட்ட சபை மிகுந்த உபத்திரவத்தின் வழியே கடந்து வர வேண்டிய நிலை ஏற்படும். முன்பக்கத்தில் எழுதியபடி முழு உலகத்திற்கும் ஒரே வித ஆட்சியும் ஒரே வித அடையாள முத்திரையும் இருக்கும்.

வெளிப்படுத்தல் 13–ஆம் அதிகாரம் 16 முதல் 18 வசனங்கள் வரை சொல்லப்பட்டுள்ள வேத வாக்கியத்தின் படி அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதன் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும். புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக் கடவன் அது மனுஷ இலக்கமாயிருக்கிறது. அதனுடைய இலக்கம் அறுநூற்று அறுபத்தி ஆறு 666

எனவே, வரப்போகிற பிரபுவாகிய அந்திக் கிறிஸ்து 666 என்ற முத்திரையையோ அல்லது அதற்கு இணையான முத்திரையையோ நெற்றியில் அல்லது வலது கையில் குத்திக் கொள்ள வைப்பான். உலக மக்கள் எண் முத்திரையைக் குறித்து எந்தவிதமான அச்சமும் கொள்ள மாட்டார்கள்.

இப்பொழுதே அநேக தேசங்களில் ஊர்களுக்கு எண் கொடுக்கப்பட்டள்ளது. தொலைபேசிகளுக்கு எண் கொடுக்கப்பட்டுள்ளது. ரயில்களுக்கு பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கம்பியூட்டர் மயமாக்கப்பட்டதினால் இப்பொழுது அவைகளுக்கும் எண்களே கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே காவல்துறையில், அரசு போக்குவரத்துக் கழகங்களில், பெரும்தொழிற் சாலைகளில் அடையாள எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

நமது இந்தியாவில் கடந்த நாட்களில் நடைபெற்ற சில தேர்தல்களின் போது பல மாநிலங்களில் வாக்காளர்களுக்குப் பெயர்களுக்கு பதிலாக அடையாள எண் பரிச்சார்த்தமாகக் கொடுக்கப்பட்டது. எனவே அந்திக் கிறிஸ்து அடையாள முத்திரையைக் கொடுக்கும்போது அதை சாதாரணமாக ஏற்றுக் கொள்வார்களே தவிர அதை எவரும் பெரும் பிரச்சினையாக்கமாட்டார்கள்.

நெற்றியிலாவது மணிக்கட்டிலாவது குறிப்பிட்ட அடையாளங்களை மனிதத் தோலுக்கடியில் பதிக்கக் கூடிய வாய்ப்புகள் நவீன முறை லேசர் கதிர் இயந்திரத்தினால் சாத்தியமாகிறது. கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று கண்டுபிடிப்பது போலவே தோலுக்கடியில் இருக்கும் எண் என்னவென்று கண்டுபிடிக்க ஸ்கேனர் இயந்திரங்கள் இப்போது இருக்கிறது.

இந்திய சூழலைப் பொறுத்தவரை தோலுக்கடியி லென்ன தோலுக்கு வெளியேயும் எண்களைக் குத்திக் கொள்ள தயங்கமாட்டார்கள். மறைந்த அரசியல் தலைவர் ஒருவர் தன் கட்சிக்காரர்களை கட்சியின் தேர்தல் சின்னத்தை கைகளில் பச்சை குத்திக் கொள்ள சொன்னபோது பட்டதாரிகள் முதற்கொண்டு பாமரர் வரை குத்திக் கொண்டது உங்கள் ஞாபகத்திலிருக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது, இப்போதுள்ள முதல்வரின் உருவத்தையே அமைச்சர் பெருமக்களெல்லாரும் பச்சை குத்திக் கொள்வதாகப் பத்திரிகையில் படித்தேன்.

சுயாதீனமும் சுயமரியாதையும் காத்துக் கொள்ள வேண்டிய இந்தக் காலத்திலேயே இப்படி முத்திரை குத்திக் கொள்ளத் தயங்காதவர்கள், சர்வாதிகாரமும் உபத்திரவமும் தலைவிரித்தாடும்போது என்ன செய்வார்கள் என்று



யோசித்துப் பாருங்கள். கிறிஸ்துவை மறுதலிப்பவர்களுக்கும் கிறிஸ்து அற்ற மதத்தைத் தழுவுபவர்களுக்கும் மாத்திரமே அந்த முத்திரை பதிக்கப்படும். அந்த முத்திரை பதித்தவர்களுக்கு மாத்திரமே ஜீவனத்திற்கேதுவான பொருட் கள் வழங்கப்படும்.

அந்திக் கிறிஸ்துவை எதிர்ப்பவர்களுக்கு அந்திக் கிறிஸ்துவினால் உபத்திரவமும் அந்திக் கிறிஸ்துவின் ஆதரவாளர்களுக்கு பரலோகத்தின் தேவனால் உபத்திரவமும் ஏற்படும். ஒருவனுக்கு சத்துருக்கள் அவன் வீட்டாரே. நீங்கள் உங்கள் சகோதரரால் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள். நியாய சங்கத்திற்கு அழைத்துச் சென்று அடிக்கப்படுவீர்கள் என்று இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தை அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியில் அப்படியே நிறைவேறும்.

மகன் தகப்பனாலும் தகப்பன் மகனாலும் காட்டிக் கொடுக்கப்படுவார். சொந்த சகோதரனாலேயே அந்திக் கிறிஸ்துவின் ஆட்களின் கரத்தில் ஒப்புவிக்கப்படுவார்கள்.

அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் கைவிடப் பட்ட விசுவாசிகளும் யூதர்களும் புறஜாதிகளும் இந்தப் பூமியில் இருப்பார்கள். இவர்களின் கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு முதல் 3 ஆண்டு காலம் உபத்திரவம் இருக்கும். அந்திக் கிறிஸ்து யூதர்களோடு ஏழாண்டு காலம் உடன்படிக்கை செய்திருப்பதால் முதல் 3 ஆண்டுகாலம் யூதர்களுக்கு உபத்திரவம் இருக்காது.

சத்தியத்திற்கு வைராக்கியமாய் நின்ற ஆதித்திருச்சபையினர் சந்தித்த கடுமையான – கொடுமையான உபத்திரவங்களைப் போல் கைவிடப்பட்ட விசுவாசிகளும் உபத்திரவத்தை சந்தித்தே ஆக வேண்டும். எனவே இவ்வகைக் கூட்டத்தினரில் பலர் கிறிஸ்தவ விசுவாசத்தை மறுதலித்து அந்திக் கிறிஸ்துவை பின்பற்றுவர்.

ஆகிலும் அவர்களுக்கு சமாதானம் உண்டாகாது. தேவ கோபாக்கினைக்கு உள்ளாகி நித்திய அழிவை சுதந்தரிப்பார்கள்.

வேலை வாய்ப்புக்காகவும் வேலை உயர்வுக்காகவும் அரசு சலுகைக்காகவும் கிறிஸ்தவராய்ப் பிறந்த பலர் விக்கிரகங்களுக்கு அடிபணிந்து மதமாற்றுச் சான்றிதழ் வாங்கி அநித்திய காரியத்திற்காய் அலைந்து கொண்டிருக்கிறதை தற்காலங்களில் பரவலாகப் பார்க்கிறோம். ஐயோ பாவம் காலாட்களோடு ஓடுகிறபோதே இளைத்துப் போகிற இவர்கள் யோர்தான் பிரவாகித்து வரும் போது அந்திக் கிறிஸ்தவின் குதிரைகள் வரும்போதும் என்ன செய்வார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகிலும் ஒரு சிலரோ மேன்மையான உயிர்த்தெழு தலைப் பெறும்படி விசுவாசத்தை மறுதலியாமல் மரண பரியந்தம் உண்மையாயிரு என்ற வார்த்தையின்படி ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு தைரியமாய்ப் போராடி சாவுதனை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வார்கள்.

உபத்திரவ காலத்தின் முதல் 3 ஆண்டுகள் முடியும்போது தேவன் முன்குறித்த இரத்த சாட்சிகளின் தொகை நிறைவேறுவதினால் வெளிப்படுத்தல் 14:15–இல் சொல்லியுள்ளபடி இயேசு தாமே தம்முடைய வெண்மேகத் தோடு தரிசனமாவார். அப்பொழுது உபத்திரவகாலத்தில் இரத்த சாட்சிகளாய் மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து மத்திய ஆகாயத்திலுள்ள இயேசுவோடும் சபையோடும் சேர்ந்து கொள்வார்கள்.

இதைக் குறித்த உதாரணத்தைத் தான் மத்தேயு எழுதின சுவிசேஷம் 25–ஆம் அதிகாரத்தில் பத்துக் கன்னி கைகள் உவமையில் இயேசு சொன்னார் என்று பல வேத பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பொதுவாக அந்திக் கிறிஸ்து காலத்தை இராக்காலம் என்று அழைக்கலாம்.



இந்த உவமையில் நடு இராத்திரி என்பது அந்திக் கிறிஸ்தவின் ஏழாண்டு ஆட்சியின் முதல் 3 வருட முடிவைக் குறிக்கிறது. பத்துக் கன்னிகைகள் என்பது கைவிடப்பட்ட பரிசுத்தவான்கள் மணவாட்டி என்பது வேறு. 'கன்னிகைகள் என்பது வேறு' மணவாட்டி என்பது எடுத்துக் கொள்ளப் பட்ட பரிசுத்தவான்கள், உபத்திரவ காலப் பரிசுத்தாவன்கள் கன்னியராகிய தோழிகள். இந்தப் பத்துப் பேரில் ஐவர் மணவாளனோடு கலியாண வீட்டில் சேர்ந்து கொண்டார்கள். மற்றவர்களோ அந்த வாய்ப்பையும் நழுவவிட்டு அழுது புலம்பினார்கள்.

மத்தேயு 25:10–ஆம் வசனத்தின் கடைசிப் பகுதியில் கதவும் அடைக்கப்பட்டது என்ற வார்த்தையின்படியே புறஜாதிகளுக்கான இரட்சிப்பின் வாசல் அத்தோடு முடிவடையும். அதன் பின்பு கர்த்தரின் கண்கள் யூதரின் பக்கமாய்த் திரும்பும். அதைப் போலவே அந்திக் கிறிஸ்துவின் கண்கள் யூதரின் பக்கம் விரோதமாய் திரும்பும். அவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையை முறித்து, யூதர்களை உபத்திரவப்படுத்துவான். அவன் ஆட்சியின் பிந்தின 3 ஆண்டுகள் மகா உபத்திரவ காலம் எனப்படும்.

தேவன் யூதருக்காக வைராக்கியங்கொண்டு அந்திக் கிறிஸ்துவின் மேலும் இந்த உலகத்தின் மேலும் வாதை நிரம்பிய கோபக் கலசங்களை தமது தூதர்களைக் கொண்டு ஊற்றுவார். இந்த அந்திக் கிறிஸ்துவின் காலத்தைக் குறித்துத் தெளிவாய் அறிந்து கொள்ள நான் எழுதிய இயேசு கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும் என்ற புத்தகத்தை கண்டிப்பாய் வாங்கி வாசியுங்கள்.

# 4

## இயேசுவின் பகிரங்க வருகை

இயேசு கிறிஸ்துவின் திறந்த வருகை மிக முக்கியமான ஒன்று. இரண்டாம் வருகை என்று நாம் பொதுவாக சொல்லுகிறதெல்லாம் அவரது பகிரங்க வருகையையே குறிக்கும். அந்திக்கிறிஸ்துவின் ஏழாண்டு கால ஆட்சியின் முடிவில் கிறிஸ்து தாமே பூலோகத்திற்கு இறங்கி வருவார்.

அவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும், சீஷர் களுக்குத் தரிசனமாகி பின்பு அவர் ஒலிவ மலையின் மேலிருந்து அப் 1 : 12 சீஷருடைய கண்களுக்கு முன்பாக பரத்திற்கு ஏறிச் சென்றார். அவர் எடுத்துக் கொள்ளப்படுகையில் ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அந்தக் காட்சியை அவர்கள் கண்ணாரக் கண்டு கொண்டிருந்த வேளையில் வெண்மையான வஸ்திரம் தரித்த தூதர்கள் அவர்கள் அருகில் வந்து நின்று.

கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் இறங்கி வருவார் என்றார்கள். அப்போஸ்தலர் 1 : 11

தேவ தூதர்களின் கூற்றுப்படி இயேசு கிறிஸ்து எப்படி ஏறிச் சென்றாரோ அப்படியே இறங்கி வருவார். உயித்தெழுந்த இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு ஆவிக்குரிய மேனி



உண்டாயிருந்ததல்லவா? அந்த சரீரத்தோடே தான் தம்முடைய சீஷர்களுக்கு தரிசனமானார். அந்த சரீரத்தைத் தான் தோமா தொட்டுப் பார்த்தார் – அந்த சரீரத்தோடு தான் பரமேறிச் சென்றுள்ளார். எனவே அந்த சொந்த சரீரத்தோடே தான் இந்தப் பூலோகத்திற்கு இறங்கி வருவார்.

இயேசு கிறிஸ்து எந்த வாகனத்தில் வருவார்? என்று பரிகாசக் கேள்வி கேட்கிறார்கள். என் ஆண்டவராகிய இயேசு மயில் வாகனத்தின் மேலோ, ரயில் வாகனத்தின் மேலோ வரமாட்டார். என் கர்த்தராகிய இயேசு எலி வாகனத்தின் மேலோ ஹெலிகாப்டர் வாகனத்தின்மேலோ, பஸ் வாகனத்தின் மேலோ வரமாட்டார். என் நேசர் கருட வாகனத்தின் மேலோ, கார் வாகனத்தின் மேலோ வரமாட்டார்.

அப்போஸ்தலர் 1 :9 இல் சொல்லப்பட்டபடி மேகத்தோடு சென்ற என் ஆண்டவர் தானியேல் 7 :13ன் படியும் மத்தேயு 24:30ன் படியும் வானத்தின் மேகங்கள் மேல் வருவார். அல்லேலூயா!

எப்படிப் போனாரோ அப்படியே வருவது மாத்திரமல்ல. எங்கிருந்து ஏறிப் போனாரோ அங்கேயே இயேசு கிறிஸ்து வந்திறங்குவார். இயேசு ஒலிவமலையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று அப்போஸ்தலர் 1 : 12 கூறுகிறது. அப்படியே கிறிஸ்தேசு தமது பகிரங்க வருகையில் சகரியா 14:4ன்படி ஒலிவமலையின் மீதே வந்திறங்குவார்.

இங்கே ஒலிவ மலையைக் குறித்த தீர்க்க தரினத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். சகரியா 14 : 4இல் இயேசு கிறிஸ்து இந்தப் பூவுலகத்திற்கு வரும்போது அவருடைய பாதங்கள் ஒலிவ மலையின் மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவ மலைத் தன் நடு மையத்திலேயே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்து போம் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்தத் தீர்க்கதரிசனம் கர்த்தருடைய வருகையில் நிறைவேறுமா என்ற கேள்வி அநேகருக்கு எழலாம். ஆகிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நூறு சதம் துல்லியமாய் நிறைவேறும் என்பதற்கு புவியியல் ஆய்வுகள் சாட்சியிடுகின்றன.

ஹில்டன் என்ற சர்வதேச ஓட்டல் கம்பெனியார் ஒலிவ மலையின் மேல் ஒரு சுற்றுலா மையத்தைக் கட்ட திட்ட மிட்டு ஆராய்ச்சி செய்த போது மிகப்பெரிய பூமியதிர்ச்சி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் ஒலிவமலைப் பகுதியில் இருப்பதாகவும் இப்பொழுதே கிழக்கு மேற்காக லேசான வெடிப்பு இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டு கட்டிடம் கட் டும் பணிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டனர்.

இரகசிய வருகைக்குப் பின்பு அந்திக் கிறிஸ்து வெளிப்படும்போது அவனை மேசியா என்றெண்ணி யூதர்கள் ஏற்றுக் கொள்வார்கள். வரப்போகிற அந்திக்கிறிஸ்து ஆரம்பக் காலக் கட்டத்தில் யூதர்களுக்கு சாதகமாயிருந்து மேசியா போல் காண்பித்து ஏழாண்டுகள் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்வான். தானியேல் 9:27

அந்த உடன்படிக்கையில் சில காலம் அவன் உண்மையாயிருப்பான். ஆகிலும் அவன் ஆட்சிக் காலத்தின் மையப்பகுதியில் தன் சுய ரூபத்தை வெளிப்படுத்துவான். தன்னையே தேவனாகக் காண்பித்து பரத்திற்கு விரோதமாய்க் கிரியை செய்வான். அவனுடைய செயலைக் கண்டு யூதர்கள் விழிப்பைப் பெறுவார்கள். அந்திக் கிறிஸ்து கள்ளமேசியா என்று அறிந்து அவனுக்கு எதிராய் மாறுவார்கள். இதனால் அந்திக் கிறிஸ்து யூதர்களைக் கடுமையான உபத்திரவத்திற்கு ஆளாக்குவான்.

அந்நாட்களில் மல்கியா 4:5,6ன்படி கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்பு நான்



உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியை சங்காரத்தால் அழிக்காதபடி அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான் எலியா தீர்க்கதரிசியையும் வெளிப்படுத்தல் 11:3ன்படி மற்றொரு தீர்க்கதரிசியையும் இரண்டு சாட்சிகளாய் அனுப்புவார். அவர்கள் யூதர்களை தைரியப்படுத்துவார்கள்.

அது மாத்திரமல்ல சகரியா 12:10இல், நான் தாவீதின் குடும்பத்தாரின் மேலும் எருசலேமின் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன் என்றபடி அவர்கள் மேல் விசேஷமான விண்ணப்ப ஆவியை ஊற்றுவார்.

அப்பொழுது அவர்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாய் கல்வாரி சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே மேசியா என்று உணர்ந்து தமது ஒரே பேறான குமாரனுக்குத் துக்கித்து அழுவது போல் அழுவார்கள். அச்சமயத்தில் தான் இயேசு இறங்கி வருவார். தாங்கள் குத்தினவரைப் பார்ப்பார்கள் என்ற சகரியா 12 :10ன்படி யூதர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் புலம்புவார்கள். அப்பொழுது கிறிஸ்து அவர்களுக்கு மனமிரங்கி ஆதரவாக இருப்பார்.

அப்பொழுதே அந்திக் கிறிஸ்துவோடும் அவன் கூட்டத்தாரோடும் யுத்தம் செய்வார். அந்திக் கிறிஸ்துவையும் அவனோடிருந்த கள்ளத் தீர்க்கதரிசியையும் பிடித்து அக்கினிக் கடலில் போடுவார். ஆதாமிலிருந்து திறந்த வருகை வரை இந்த மனுக்குலத்தினை மோசம் போக்கின பிசாசானவனைக் கட்டி பாதாளத்தில் ஆயிரம் ஆண்டுகள் அடைத்து வைப்பார். அதன்பின் இந்த முழு உலகமும் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் இருக்கும்.

இயேசு கிறிஸ்து தாமே இந்த முழு உலகத்திற்கும் இராஜாதி இராஜாவாய் இருப்பார். பன்னிரெண்டு அப்போஸ்தலவர்களும் இஸ்ரவேலில் பன்னிரெண்டு கோத்திரத்தை ஆளுவார்கள். வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் யாவரும் அவரவர்களின் பலனுக்கேற்ப ஆளுகை பெற்று இயேசுவோடு ஆயிரம் ஆண்டுகள் ஆளுவார்கள்.

தம்மை விரோதித்த அவபக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயம் தீர்த்திடுவார்.
இயேசு கிறிஸ்து வருகின்றார்
இந்த கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டுபுலம்பிடுமே!



# 5

## இயேசுவின் வருகைக்கு ஆயத்தந்தானா?

பிரியமான வாசகரே, கடந்த அத்தியாயங்களில் கர்த்தரின் வருகை நிச்சயமென்றும், அவர் வருகையின் முன்னடையாளங்கள், எவைகள் என்றும், கர்த்தரின் இரகசிய வருகை எப்படியிருக்கும் என்றும் கைவிடப்பட்டால் என்னவாகும் என்றும் தெளிவாய் நீங்கள் கண்டுகொண்டீர்கள். இந்தக் கடைசிப் பக்கத்தில் நீங்கள் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தந்தானா? என்று கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய இயேசு மணவாளனாய் வரும்போது நம்மை மணவாட்டியாய் சேர்த்துக் கொள்வார். இந்த அடிப்படையில் கவிநயத்தோடு கூடிய ஒரு தீர்க்கதரிசனம் வேத புஸ்தகத்தில் உண்டு. உன்னதப்பாட்டு முழுமையையும் வாசித்துப் பாருங்கள். அதில் கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவை எவ்வளவு அழகாக விவரிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? அதில் ஒரு பரிதாபக் காட்சியை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மணாவாட்டியாகிய சூலமித்தியாள், என் நேசர் வருவார் என்று ஏக்கத்தோடு புகழ்ந்து பாடிக் காத்துக் கொண்டிருக்கிறாள். ஒருநாள் ஆத்தும நேசர் அவளை சந்திக்க வந்து விட்டார். அவர் வரும் சத்தம் கேட்கிறது. கூப்பிடும் சத்தம் கேட்கிறது. கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. ஆத்தும நேசரை அடையாளம் கண்டு கொண்ட

இவளோ கதவைத் திறக்க முடியாமல் கதறுகிறாள். என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேனே. நான் எப்படிக் கதவைத் திறப்பேன். உன்னதபாட்டு 5:2,3 என அங்கலாய்க்கிறாள்.

தெய்வப்பிள்ளையே! உன் நிலை எப்படி? ஆண்டவர் வருகையை விசுவாசிக்கிறாய். அவர் வருகையைக் குறித்து அழகாகப் பாடுகிறாய். இன்று அவர் வந்தால் சந்திப்பதற்கு இரட்சிப்பின் வஸ்திரங்களை பரிசுத்த ஜீவியத்தை காத்துக் கொண்டிருக்கிறாயா?

உன் வஸ்திரம் பாவத்தால் கறைப்பட்டிருக்கிறதா? உன் வஸ்திரம் விபச்சார மயக்கத்தால் வெந்து போயிருக்கிறதா? நீதிமொழி 6 : 27 பின் மாற்றத்தினால் உன் வஸ்திரம் அழுக்காய் மாறிப்போய் இருக்கிறதா? கலியாண வஸ்திரம் தரியாமல் ஆட்டுக்குட்டியானவரின் விருந்துக்கு எவரும் வர முடியாது.

கர்த்தருடைய வருகை எப்பொழுது இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. கடைசி நிமிடங்களில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். மதியீனத்தினிமித்தமும், மிஞ்சின நீதியினிமித்தமும் அவர் வருகையின் நாளை சிலர் முன் குறித்து தோற்றுப் போனாலும் இயேசுவின் வருகை இனி தாமதிக்கப் போவதில்லை.

இயேசுவே வரத் தாமதித்தாலும் இந்த உலகம் அவரை வருந்தி அழைத்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை கர்த்தர் தாமதிக்கலாம். ஆனால் நம்முடைய மரணம் என்றைக்கு நம்மை சந்திக்கும் என்று தெரியாது. ஆகவே அவர் நினையாத நாழிகையில் வரப்போகிறார்.

ஜீவனானாலும் மரணமானாலும் அவரை சந்திக்க ஆயத்தமாயிரு. அவர் வரும்போது நீ நிர்வாணியாய்க்



காணக்கூடாதபடிக்கு அவரிடத்தில் வஸ்திரங்களைக் கேட்டு வாங்கிக் கொள்.

சாக்குப் போக்கு சொல்ல இது காலமல்ல. உலகத்தைப் பார்க்காதீர்கள். இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். விழுந்து போனவர்களைப் பார்க்காதீர்கள், எழும்பிப் பிரகாசிப் பவர்களைப் பாருங்கள். கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத் தக்க பூரண வளர்ச்சியைப் பெற பரிசுத்த வசனத்தில் நாட்டம் செலுத்தி பரிசுத்தாவியின் நிறைவில் வாழுங்கள். வளருங்கள். கர்த்தருக்கு சித்தமானால் வருகையில் சந்திப்போம். மாரநாதா!

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**